★ ஸ்டார் பிரசுரம்



# தற்காலத் தமிழ்க் கவிதை

— ஏழு கவிஞர்கள் —

விமர்சனம் :

வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.

T14502
R005D04
T. 14502

* இலக்கிய ரத்னங்கள் —

— புரட்சி ஸ்டார்கள் *

| | |
|---|---|
| கல்லறை மோகினி — 'சோமு' | ரூ. 3—0—0 |
| முல்லைக் கொடியாள் — விந்தன் | ரூ. 3—0—0 |
| புரட்சி வீரர் — S. ஷண்முகம் | ரூ. 3—0—0 |
| ஜீவாவின் சிறு கதைகள் | ரூ. 3—0—0 |
| இளவேனில் — 'சோமு' | ரூ. 2—0—0 |

## விரைவில் வெளிவரும்

'நன்மைக்கும் தீமைக்கும் அப்பால்'

— ஜர்மன் ஞானி நீட்ஷி

'அழகியும் காதலும்' — ஷெல்லி

தமிழில்: T. V. சுவாமிநாதன், B. Sc.
V. R. M. முன்னுரையுடன்.

"இயற்கையின் எழில்" — எமர்ஸன்

தமிழில்: V. R. M



# தற்காலத் தமிழ்க் கவிதை

விமர்சனம்

வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.

★

ஸ்டார் பிரசுரம்
ராமச்சந்திரபுரம்
(திருச்சி ஜில்லா)

MODERN TAMIL POETRY - CRITICISM

FIRST EDITION - JUNE 1948
COPYRIGHT

"பாட்டுக் கொருபுலவன் பாரதியடா—அவன்
பாட்டைப் பண்ணொடொருவன் பாடினானடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா—அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா."

— தேவி —

STAR PUBLICATIONS
RAMACHANDRAPURAM (TRICHY DT.)

விலை ரூ. 1—0—0

PRINTED AT THE MADRAS RIPON PRESS, R. C. PURAM
FOR STAR PUBLICATIONS, R. C. PURAM - 1000 COPIES




I தற்காலத் தமிழ்க் கவிதை :

பாரதியார்

தேவி

பாரதி தாசன்

சுத்தானந்த பாரதியார்

சுப்பிரமணிய யோகி

ராமலிங்கம் பிள்ளை

'சோமு'

II கவிதை வெறி :

தேவியும் உமர்கயாமும்

ஷெல்லியும் சுத்தானந்தரும்

கவிமணியின் கவிதை மின்னல்

தேவி—தாகூர்—ஷெல்லி

# முன்னுரை

தற்காலத் தமிழ்க் கவிதையில், புதிய புதிய கருத்துக்களும், புரட்சிகரமான கொள்கைகளும், தேசாபிமானமும், வீரமும், பெண்மையில் புதுமையும், பாப்பாவின் பரந்த நோக்கமும், மொழி வளர்ச்சியும், இசை வெறியும் மண்டிக் கிடக்கின்றன.

பாரதியார் வெறியின் உச்சியில், சக்தியுள்ள தமிழில், நாதகாம்பீரியத்துடன் பாடுகிறார்: அவர் காண்பது புதிய புதிய உண்மைகள், புதிய புதிய ஒளி வெள்ளம், புதிய வாழ்க்கை விஸ்தீரணம், சுதந்திர வெறி, புதிய சுதந்திரக் காதல், சத்திய தரிசனம், மெய்விளக்கம், ஜாதி பேதமற்ற சரிநிகர்சமான வாழ்க்கை, ஒளி பொருந்திய ஒற்றுமை.

'தேவி' சாந்திக் குன்றில் நின்று கவிதை மழை பொழிகிறார்; மாபெரும் உண்மைகள் மங்காமல் தெளிவு பெற்று, ஓங்கிய கம்பம்போல மின்னி மிளிர்கின்றன.

பாரதிதாசன், இயற்கையாகவே, இசைக் கடலை இதயத்தில் தேக்கி, மனித வாழ்க்கையின் முன்னேற்றத்தைக் குறித்தே குமுறி நிற்கின்றார்; புரட்சியிலே பாய்ந்து கரையேறுகின்றார்; மக்கள், கவிஞரின் தூய தமிழைப் பருகித் தலை நிமிர்ந்து நிற்கின்றனர்.

சுத்தானந்தர், கவிதையின் எல்லை தாண்டி இசையில் மூழ்கி மூழ்கி வெளிவருகின்றார்; இசைக் கூண்டிலே, "இறைவா! இறைவா!"

என்று கதறிக்கொண்டு வருகின்றார், நமது யோகி.

சுப்பிரமணிய யோகியாரின் கவிதையில், ஆன்மவெறி அலையடித்தோடுகிறது; காதலும் கொந்தளித்து வழிந்தோடுகிறது; பெண்மையின் வருணனையில், கூந்தல் முதல் குதிகால் வரை, அழகின் ஜாலமும் ஜ்வாலையும் கட்டிப் புரளுகின்றன. சிற்சில இடங்களில், சொற்கள் ஒரே கருத்தைச் சுற்றிச் சுற்றி வருகின்றன.

நாமக்கல் கவிஞர். வெள்ளைச் சொற்களை வெள்ளையாகவே எறிந்து விளையாடுகிறார். இதயக்கனல், சத்தியச் சுடராகவே, உட்புகுந்து உலகையே வளைத்துக் கொள்கிறது. பெண்களின் 'கோலாட்டம்' அற்புதமான கவிதை — இசைப் பின்னலும் கூடத்தான்! ராமலிங்கம் பிள்ளையவர்களின் பாடல்களில், கவிதை நலத்தை விட இசையமுது அதிகம்: சிறு குழந்தையும் உணர்ந்து பாடலாம்.

'சோமு'வின் கவிதை சுந்தரக் கவிதை: இதயம் பாய்ந்த கவிதை, இசைபாய்ந்த கவிதை, கருத்தோவியக் கதம்பம், அமைதியின் அணிகலம், பொறுமையின் நிலையம், உண்மைக்கோர் ஆலயம்; சொற்கள் ரோஜா இதழ்கள் — வருணத்திலும் வரிசையிலும். ஆம்!

கவிதையை ஆவேசத்துடன், உள்ளொளியுடன் சிருஷ்டி செய்பவர்கள் எத்தனை பேர்?

சூரியன் ஒளிப்பந்தமாக வருவதையோ, சந்திரன் விண்ணில் பிறைபோல ஊர்ந்து வருவதையோ, கடல் பொங்கிக் கும்மாளியிடுவதையோ, அலையில் சுதந்திரமாக நீந்தி விளையாடும் மீனையோ, அல்லது காட்டில் அந்தரங்கமாக அலையும் மானையோ கண்ணால் கண்டிராத புலவர்கள், இயற்கையின் சலனத்தையோ சௌந்தரியத்தையோ உணராமல், கவி பாடுவதென்றால் வேடிக்கையாகத்தானே இருக்கும்: செய்யுளால் சுவர் எழுப்பி, கவிதையின் ஜீவ நாடியையே புதைக்கும் போலிக் கவிஞர்கள், நெஞ்சில் ஈரமிலாத காய்ந்த கவிஞர்கள், கவிதைப் பயிரை வளர்க்க முடியுமா?

இயற்கையோடு கலந்து ஒன்றி மலர்கின்ற கவிதையுள்ளமே, தனி இன்பம் கொண்டது; சந்திரனைக் கவிதை மாளிகையில் கவிஞன், உண்மைக் கவிஞனே விருந்துக்கு அழைக்கமுடியும்; கவிஞன், தனது அரிய சொல்லோவியத்தால், சந்திர ஒளியையே தனது மகோன்னதச் சித்திரத்தில் சிறைப்படுத்திவிடுகிறான். அழகின் சிரிப்பைக் கண்டு பாரதிதாசன் பாடியே பறக்கின்றார். கவிஞனுடைய சாதுரியமான சௌந்தரியமான சந்திரன், போலிச் சந்திரனல்லவே, ஊமைச் சந்திரனல்லவே, உளறுவாய்ச் சந்திரனல்லவே: பேசும் பொற் சித்திரமாகவல்லவோ, விண்ணிலிருந்து கவிஞன் இதயக் கமலத்தில் இறங்கி, தமிழ்த்தாயின் மடியில் வந்து விளையாடுகிறான்.

உண்மைக் கவிஞன் உள்ளத்தில், புலியின் குரலும் சிம்ம கர்ஜனையும் தாய்மொழியாகவே வந்து விளையாடும், என்று ஆங்கிலக் கவிஞன் கீட்ஸ் (**Keats**) அருமையாகக் கூறிவிட்டு, மறைந்தே போனான்! ஐயோ, எவ்வளவு

பெரிய உண்மையை இந்த இளங் கவிஞன் அனுபவித்து ஆவேசத்துடன் கதறிவிட்டான், பாருங்கள்! இதுவே உண்மைக் கவிஞனுக்கும், போலிக் கவிஞனுக்கும் உள்ள வித்தியாசம். போலிக் கவிஞர்கள், இயற்கையோடு ஒன்றி வாழாத கவிஞர்கள், திக்குவாய்க் கவிஞர்கள்தான் — ஆம்! — திக்குவாய்க் கவிஞர்கள்! போலிக் கவிஞர்கள், சொற்களை, உயிரற்ற சொற்களை அறியாமைப் படகில் ஏற்றி, புயலைக் கண்டு பயந்து, பாய் கிழிந்து, கொந்தளிக்கும் கடலிலே பயங்கரமான பாறைகளில் மோதி நைந்தே மடிந்து சிதறிப் போவார்கள் (காலப் புயலில்).

'சோமு'வின் 'கவிதைப் பெண்' பாடலைப் பாடியே நாம் உண்மை காண்போம்:

"கவிதை எனுமோர் பெண்தெய்வம் — அவள்
கவிஞர் பரவும் அருந்தெய்வம்
புவியை இயக்கும் புகழ்த்தெய்வம் — அவள்
புலவர் தமக்குக் குலதெய்வம்

*

கையில் வளைகள் ஆடிடுமே — அவள்
காலிற் சிலம்பு பாடிடுமே
மெய்யில் மின்னல் வீசிடுமே — அந்த
மேனி கவிதை பேசிடுமே

*

பூவில் நின்று சிரித்திடுவாள் — அவள்
பூங்கொடி தன்னில் ஆடிடுவாள்
காவில் வீசும் காற்றினிலே — இன்பக்
கண்ணிகள் பாடி உலவிடுவாள்

*

நீலமா மயிலின் தோகையிலே — எழில்
நெய்திடு பட்டுப் பூச்சியிலே
மாலையின் செவ்விய வானகத்தே — நின்று
மந்திரிப் பாளவள் அந்தரத்தே

ஆடிடு வாள்கடல் அலைகளிலே — எழுந்(து)
ஆர்த்திடு வாள்புயற் காற்றினிலே
ஓடிடு வாள்நதி ஓட்டத்திலே — அவள்
உதித்திடு வாள்கதிர் வட்டத்திலே

*

கவிதை எனுமோர் பெண்தெய்வம் — அவள்
கவிஞர்க் கெல்லாம் குலதெய்வம்
புவியை இயக்கும் புகழ்த்தெய்வம் — அவள்
புலவர்க் கெல்லாம் குலதெய்வம்''

அருமைச் 'சோமு' எவ்வளவு அருமையாக, ஆழமாகவே பாடிவிட்டார், — ஆம், உண்மைக் கவிஞர் அல்லவா? சொற்கள், கவிதை மின்னும் சொற்கள், இசையே பொழியும் இங்கிதச் சொற்கள், 'சோமு'வின் இதயச் சுனையினின்று குமிழியிட்டு வருகின்ற காட்சியே காட்சி! இதுவல்லவோ உண்மைக் கவிஞனின் உண்மைக் கவிதை. எல்லோரும் கவிதை எழுதுகிறோம், கவிதை எழுதுகிறோம் என்றால் ஒன்றும் அர்த்தமேயில்லை.

பப்பாளிக் கவிதையும் — தக்காளிக் கவிதையும் — சாம்பிய உயிரற்ற கவிதையும் எழுதுவதில் என்ன பிரயோஜனம்! உள்ளே ஒளி மின்னப் பிறந்த கவிஞன்தான், உண்மைக் கவிதை எழுத முடியும்! அவனுடைய அருட் கவிதையே, கனிரஸம் நிரம்பியது.

சித்தரஞ்சன தாஸின் 'சாகர் — சங்கீத்' (கடல் பாட்டு) மிகமிக அருமையான கவிதை.

25—5—48 — வி. ஆர். எம் —

# 1

## பாரதியாரின் மந்திரச் சொல்

நமது தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியாரின் கவிதை தனிச்சிறப்புடையது. உணர்ச்சிப் படலங்கள் தங்கக் குமிழிகளாகவே கொப்பளித்து வருகின்றன. தமிழ்மொழி பாரதியாரின் கையில், உணர்ச்சிக் கடலை அளக்கும் அளவுகோலாகவே பிறந்துவிட்டது; அதுவே மந்திரக்கோலாக மின்னி வருகிறது. எளிய சொற்கள், புதிய சோபையுடன், மந்திரச் சொற்களாகவே பிறக்கின்றன. உணர்ச்சிக் குன்றின்மேல் பாரதியாரின் கவிதை விளையாடும்போது, தமிழ்மொழி, மின்னற் சிலம்பம் வீசுகிறது; சொற்கள் சிறகடித்துப் பறக்கின்றன; இடியேறும் இடுகாடும், இறைவன் பாதத்தில் களங்கமற்று இறுமாந்த இலக்கிய ரசனையுடன் விளையாடுகின்றன; நட்சத்திரங்கள் மலர்களாகவே மணக்கின்றன; வெண்ணிலா தனது அகண்ட வெண்மையைப் பொழிந்து உலகத்தை இன்புறுத்துகிறது; தத்துவங்கள், வாழ்க்கையின் இன்னல்களை மாற்றுகின்றன; இசைக் கொடி ஆகாசத்தை எட்டிப் பிடிக்கிறது; குழந்தையின் உள்ளத்தில் மழலை இசைக்கிறது; தாயின் அன்பு எல்லையற்று விளங்குகிறது; காதல் கலங்கித் தெளிந்து, புலம்பிக் குமுறி, மௌன ரீங்காரமாக உதயமாகி, கண்வலை வீசிப் பித்தர்களைப் பிடித்

துக்கொள்ளுகிறது; சுதந்திர வெறியை அள்ளி வீசுகிறது; பெண் விடுதலை முழக்கம் செய்கிறது; புதுமைப் பெண்ணையும் அபூர்வமான காம்பீரிய சௌந்தரியத்துடன் பாரதியார் சிருஷ்டித்திருக்கிறார்.

'ஊழிக் கூத்து' என்ற சக்திப் பாடலில் பாரதியாரின் மந்திரச் சொல்லைப் பாடிப் பாடிப் பாருங்கள்:

வெடிபடு மண்டத் திடிபல தாளம்போட—வெறும்
வெளியி லிரத்தக் களியொடு பூதம்பாடப்—பாட்டின்
அடிபடு பொருளின் அடிபடு மொலியிற் கூடக்—களித்
தாடுங்காளீ, சாமுண்டீ; கங்காளி!
அன்னை, அன்னை
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை.

ஐந்துறு பூதம் சிந்திப்போ யொன்றாகப்—பின்னர்
அதுவும் சக்திக் கதியில் மூழ்கிப்போக—அங்கே
முந்துறு மொளியிற்சிந்தை நழுவும் வேகத்—தோடே
முடியா நடனம் புரிவாய், அடுதீ சொரிவாய்
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை.

* * *

சத்திப் பேய்தான் தலையொடு தலைகள் முட்டிச் சட்டச்
சடசட சட்டென் றுடைபடு தாளங்கொட்டி—அங்கே
எத்திக்கினிலும் நின்விழியனல் போயெட்டித்தானே
எரியுங் கோலங் கண்டே சாகும் காலம்
அன்னை, அன்னை,

ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை
காலத்தொடு நிர்மூலம் படுமூ வுலகும்—அங்கே
கடவுள் மோனத் தொளியே தனியாயிலகும்—சிவன்
கோலங் கண்டுன் கனல்செய் சினமும் விலகும்
—கையைக்
கொஞ்சித் தொடுவாய், ஆனந்தக் கூத்திடுவாய்,
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை.''

இந்த நான்கு பாடல்களிலும் ஊழிக்கூத்தின் உறுதியான இறுதி லீலைகள் மொழிக் கண்ணுடியில் மின்னி இடிப்பதைப் பார்த்தீர்களா? உணர்ச்சியால் வேகமாக உந்தப்பட்ட சொற்கள், - மந்திரச் சொற்கள் - இடி இடிக்கின்றன. ஊழி இடியேருக விளையாடுகிறது. ஊழி ஊமையல்ல; மொழி மின்னலில் விதியின் வீதி சுழன்று மின்னுகிறது; சொற்கள், - கதறும் கர்ஜிக்கும் கவிதைச் சொற்கள், சட்டச் சடசடவென்று முட்டித் தாளங்கொட்டுகின்றன; தமிழ் மொழியின் விழி கனல் வீசுகிறது. இதுவே மின்னற் கவிதை, சன்னத மின்சாரம்.

ஒருயர்ந்த மனநிலையுள்ள கவிஞன் எழுதும் வசனமும் கவிதை மணமே வீசுகிறது; இதயத்தினின்றும் பாடிக்கொண்டு வெளிவரும் சொற்கள் காவிய கதியுடனே வசனகாவியமாகவே உதயமாகின்றன; வசன லாகவத்தில், இதயத்துடிப்பு அணி நிறைந்த காவிய மாளிகையாகவே ஜனிக்கிறது. பிரான்ஸிஸ் தாம்ஸன், நியூமன், ரஸ்கின், டிகுவன்ஸி போன்றவர்கள் எழுதும் வசன காவிய

நடையைப்போல, பாரதியாரின் வசன நடையும் கற்பனை மண்டிய அணிக்கோலமாகவே உதய மாகிறது. இதனால் நாம் அறிந்துகொள்ளும் உண்மை என்ன? உண்மைக் கவிஞனின் உள்ளத்தில், உதிக்கும் வேகம் நிறைந்த சொற்றொடர், எந்த வடிவத்திலும் கவிதையின் ஜீவகளை கொண்டது; எப்பொருளிலும் அழகையும் ஆனந்தத்தையும் அனுபவிக்கும் இளங்கவி ஜான் கீட்ஸ் (Keats) எழுதியிருக்கும் கடிதங்களில் கூட, கவிதைப் பண்புள்ள வசன ரீங்காரத்தை நாம் கண்டுகளிக்கலாம். பாரதியாரின் வசன காவியச் செல்வத்தில் சிந்தனையின் ஆழ்ந்த தேனூறு ததும்பிப் புலம்பி வருகிறது. உதாரணமாக 'காட்சி' என்ற தலைப்பின் கீழ், 'ஞாயிறு' எவ்வாறு உதயமாகிறது, பாருங்கள்:

'நீ ஒளி, நீ சுடர், நீ விளக்கம், நீ காட்சி
மின்னல், இரத்தினம், கனல், தீக்கொழுந்து -
[இவை யெல்லாம் நினது திகழ்ச்சி
கண் நினது வீடு
புகழ், வீரம் - இவை நினது லீலை
அறிவு நின் குறி, அறிவின் குறி நீ
நீ சுடுகின்றாய், வாழ்க. நீ காட்டுகின்றாய், வாழ்க.
உயிர் தருகின்றாய், உடல் தருகின்றாய்,
வளர்க்கின்றாய், மாய்க்கின்றாய்,
நீர் தருகின்றாய், காற்றை வீசுகின்றாய், வாழ்க

* * *

ஞாயிறே, இருளை என்ன செய்துவிட்டாய்?
ஓட்டினாயா? கொன்றாயா? விழுங்கி விட்டாயா?
கட்டி முத்தமிட்டு நின்கதிர்களாகிய கைகளால்
[மறைத்து விட்டாயா?

இருள் நினக்குப் பகையா?
இருள் நின் உணவுப் பொருளா?
அது நின் காதலியா?
இரவெல்லாம் நின்னைக் காணாத மயக்கத்தால்
[இருண்டிருந்ததா?

இதைப் படித்து இன்புறும்போது, ஆங்கிலக் கவிதா மேதை ஷெல்லியின் ஞாபகம் அதில் பிரதி பலிப்பது போலத் தெரிகிறது. ஷெல்லியின் கவிதைக் கடலில் நீந்திய பாரதியார் இவ்வாறு எழுதுவது ஒரு விந்தையல்ல! ஷெல்லி தனது பாடல்களுக்கு எழுதியிருக்கும் முன்னுரைகள் எல்லாம், வசன காவியப் பொன்னுரைகளே யாகும். ஷெல்லியின் 'புயல்' பாட்டில், உண்மைக் கவிதையை மந்திரச் சொல் (Incantation) என்று உறுதிமொழி கூறுகிறான்.

## 2

## கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்

கவிமணி 'தேவி' அவர்களின் கவிதை தனிச்சிறப்புடையது; அதில் அருட்பொலிவு மின்னுகிறது. சொற்களிலும் சொற்றொடர்களிலும் சிருஷ்டி மெருகு தவழ்கிறது; அபூர்வமான சொற் சித்திரங்களாகவே, கவிதை மின்னிப் பிறக்கிறது; கற்பனையின் மணமும் மறுமலர்ச்சியும் பரவிக்கிடக்கின்றன; கவிதையின் தூய வெண்ணிற வடிவம் (Purity of form) நன்கு அமைந்திருக்கிறது; எளிய இனிய

சந்தங்கள் அவருடைய கவிதையை அணி செய்கின்றன; இதயத் துடிப்பும் தெரிகிறது; இயற்கையின் ஜாலமும் சஞ்சலமும், உறுதியும், தெய்வ நிலையும் தெரிகின்றன; அருளோதயமாகப் பிறக்கும் சொற்கள், கலந்து குழுறித் தெளிந்து தேனருக ஓடுகின்றன; கலையின் ஜீவன் சிறகடித்துப் பறக்கின்றது; சொந்தமாக எழுதிய பாட்டுக்களிலும், ஆங்கிலத்திலிருந்து பெயர்த்த தமிழாக்கக் கவிதையிலும் கலையின் உண்மையும் அழகும் கலந்து வாழ்கின்றன; இவர்கள் பாடியிருப்பது உண்மைக் கவிதை, செயற்கையில் பிறந்த செய்யுள் நடையல்ல. தெய்வம் முதல் துரும்புவரை, இவர்கள் கவிதையில் கற்பனைச் சித்திரங்களாகக் காட்சியளிக்கின்றன.

தூய்மையான கவிதை உருவில், 'தேவி' அவர்கள் பாரதியாரை மிஞ்சிவிட்டார்கள் என்று கூடச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்படுகிறது; ஆனல், சன்னதத் துடிப்பில் பாரதியார் தேவியை மிஞ்சி விடுகிருர். தேவியின் கவிதை நடை அருவிபோலத் தெளிந்து ஓடுகிறது, பாரதியாரின் காவிய நடை, புயல் வீசுகிறது; அதில் ஒரு சுழற்சியும் இன்பமாய் உதயமாகிறது. பாரதியாரின் கவிதா சிருஷ்டிச் சிறப்பை, 'தேவி' அவர்களே உணர்ந்து "பாரதி பாடலும் பட்டிக்காட்டானும்" என்று இன்பமாய் 88 வரிகளில் ஓர் இன்ப விண்ணிலிருந்து பாடியிருக்கிருர்கள்; இந்தப் பாட்டில், பாரதியாரின் கவிதைத்

தேனையே பிழிந்தெடுத்திருக்கிறார்கள். பாரதியாரின் கவிதைக்கே, இந்தப் பாடல் ஓர் இலக்கிய விமர்சனமாகவே வந்துவிட்டது; பாரதியாரின் பாடலில், இசையும் இயற்கைக் கொந்தளிப்பும், குயிலும் கிளியும் கூவும் நிலையும், வெண்ணிலாவின் தூய அகண்ட வெண்மையும், பெண்களின் கற்பு நிலையும் அதன் நிறையும் ஆணையும், தியானமும், செந்தமிழின் அழியா அமுத நிலையும், 'பாப்பா'வின் தேன்மழையும், பாஞ்சாலி சபத மின்சாரமும், கண்ணன் காதல் ரீங்காரமும், ஏழைகளின் வறுமைத் தீயும், உணர்ச்சியின் உன்னத கோபுரங்களாகவே வெளிவருகின்றன.

'தேவி'யின் 'கருணைக்கடல்' உணர்ச்சிக்கடல்; 'பாரசீகக் கவியமுதம்', 'உமர் கயாமி'ன் தத்துவ விளக்கம்; 'வெண்ணிலா, ஓர் அகண்ட பாலபிஷேகம்; கடல், ஓர் அலையோவியம்; 'புலிக்கூடு', பிளேக் (Blake) கின் மூலத்தை மிஞ்சிய விநோதச் சித்திரம்; 'ஆறு' அல்லும் பகலும் புலம்பி அலைந்து வருகிறது; தாலாட்டின் 'ஆராரோ' ஆகாசத்தையே எட்டிப்பிடிக்கிறது; 'சேவல்' ஓர் இயற்கைக் கடிகாரமாகவே தொண்டாற்றுகிறது, 'அஞ்சலி', தாகூரின் இசைச் சித்திரத்தையே எதிரொலிக்கிறது; ஒரு பறவையின் சிந்தனை, விண்ணையும் மண்ணையும் இன்பமாய் இணைக்கிறது; 'குருட்டுப்பையன்' என்ற பாடல் ஆங்கிலமகாகவி மில்டனை (Milton) நினைவுறுத்துகிறது.

'தேவி'யின் கடல் பாட்டைப் பாடும்போது சித்தரஞ்சன தாசரின் 'சாகர்—சங்கீத்' என்ற கடற் பாட்டு ஞாபகத்திற்கு வருகிறது. அலையின் தாண் டவமும், கொந்தளிப்பும், ஆத்ம சாந்தியும் கலந்து பாடும் கடற்பாட்டேயாகும். கடல் உருண்டு திரண்டு உடைந்தோடிவரும் காட்சியும், ஓடத்தை எடுத் தெறியும் காட்சியும், எல்லையறியாப் பெருங் கடலில் உயர்ந்த காவிய லீலைகளாகவே வந்து விடுகின்றன. ஒரு பாட்டைச் சுவைத்துப் பார்ப்போம். அதில் சொற்களின் ஜீவகளை குதித்து விளையாடுவதைப் பாருங்கள் :

" புலிக்கூடு "

" பந்த மெரியுதோடி — கண்களைப்
பாற்க நடுங்குதடி
குந்தம்வா லீட்டியெல்லாம் — கூடவே
கொண்டு திரியுதடி.

வாயைப் பிளக்குதடி — கையுறை
வாளும் உருவுதடி
பேயைப் படைத்தபின்னே — இதனையும்
பிரமன் படைத்தானடி.

வாலை குறுக்குதுபார் — வால்நுனி
வட்டஞ் சுழலுதுபார்
சாலப் பதுங்குதுபார் — நம்மீது
சாடவும் நோக்குதுபார்-

இடித்து முழங்குதடி — தொண்டையும்
இருப்பாலே செய்ததோடி

அடுத்து நெருங்காதேடி — அதுமிக
ஆங்காரம் கொள்ளுதடி.

மானைப் படைத்த தெய்வம் — புலியையும்
வளர்த்து விடலாமோடி
தேனைப் பழித்த சொல்லாய் — எனக்கு நீ
தெரிந்துரை செய்வாயோடி."

எவ்வளவு அழகான புலிப்படம் பார்த்தீர்களா! இந்தப்படமே, நம்மீது பாய்ந்துவிடும் என்று அஞ்சுகிறேன்.

இதைப்படித்து இன்புறும்போது, சில ஆங்கில ஆராய்ச்சி மேதைகளின் கருத்துக்கள் வந்து குவிகின்றன ; கவிதைச் சித்திரத்தில், மொழி சுடரோவியமாக உதயமாக வேண்டுமென்றும், கவிஞனின் இதய ஒலியைப் பிரதிபலிக்க வேண்டுமென்றும் எ. ஸி. பிராட்லி என்பவர் கூறுகிறார்; பிரெஞ்சு இலக்கிய மேதை ஆண்டிரி ஷெவிரில்லான், ஷேக்ஸ்பியரின் கவிதையைப்பற்றிச் செய்திருக்கும் ஆராய்ச்சியில், ஒரு கவிஞனின் கற்பனை உள்ளத்தில், சன்னதக் கொந்தளிப்பில், உணர்ச்சித் தீயை உமிழும் எரிமலையாகவே அவனுடைய மொழி மாறி விடுகிறது என்று உறுதி கூறுகிறார். வசனத்தில் கவிதை உமிழும் கார்லைல் (Carlyle), இதே கருத்தைக் கொண்டவர். கலையின் பொலிவை விளக்கும் டி. யஸ். மக்கால் (Maccoll) 278 பக்கங்களில், உண்மைச் சித்திரம் எது என்று ஆழ்ந்த விமர்சனம் செய்திருக்கிறார் ; கவிஞன் கனவே, கலை.

# 3

## புரட்சிக்கவி பாரதி தாசன்

இவர் பாரதியின் தாசனுகவே பாடுகிருர். பாரதி யாரோடு நெருங்கிப் பழகி, அவருடைய குரலின் கவிதா வெறியையும் இசை யமுதையும் கிரகித்து ஓரளவு அனுபவத்திலும் கொண்டுவந்து விட்டார். சொந்த அனுபவங்களை **பாரதிதாசன்** இசைச் சிறப்புடன் பாடியிருக்கும் சின்னஞ்சிறு கவிதைச் சித்திரங்கள், அழகிய ஜ்வாலையை அள்ளி வீசுகின்றன; உள்ளத்தில் மின்னிப் பறக்கும் உண்மைகளை, தமிழ் மொழியில் ஆவேசத்துடன் அமைத்திருக்கிருர். ஆனல் மத்தியில், சாதாரண சொற்களாகவே மதித்துச் கொச்சைச் சொற்களையும் வழங்கும்போது, கவிதையின் மாற்று குறைந்து விடுகிறது.

இவருடைய சில நயமான பாடல்கள், கவிதைக் கலைக்கு ஒரு புஷ்பாஞ்சலியாகவே பொலிகின்றன: மொழியின் சிருஷ்டி மெருகில், ஒரு புதுமையும் எழிலும் தோன்றித் தோன்றி மறைகின்றன. மொழித் திரையின் பின், உண்மை உறங்கியும் விழித்தும், ஆர்கலித்துக்கொண்டுமிருக்கிறது; இதய மகிழ்ச்சியும் சோகமும், பாவின் மணிகளில் ஒலிக்கின்றன. மொழிச் சித்திரங்கள் இதய மர்மங்களையே முரலுகின்றன. சில பகுதிகளில், மொழியின் நெளிவுகளிலும் வளைவுகளிலும் உணர்ச்சி

யின் ஏற்றமும் இறக்கமும் தெரிகின்றன; சில இடங்களில் கவிதை, சாதாரண வசனநிலைக்கும் வந்து விடுகிறது; வேறு சில இடங்களில், சின்னஞ் சிறு பொடிப்பொடிச் சித்திரங்கள், சிங்காரக் காவிய லீலைகளாக வந்து விளையாடுகின்றன; உலகம், உணர்ச்சியின் உதய அரங்கமாகவே கவி பாரதி தாசனுக்குப் புலப்படுகிறது; எல்லாம் காட்சிப் படலங்கள், உணர்ச்சியில் பிறந்து சிறந்து பறந்து வருகின்றன. கவிதை திடீரென்று மின்னும்போது, கவியின் மனஉறுதி சிதருமலிருந்தால், உயர்ந்த அழியாத கவிதை, உலவீனமின்றி நின்று நிலைக்கும். இது எந்தக் கவிக்கும் கலாயோகிக்கும் பொருந்தும் உயர்ந்த உண்மையே.

பாரதிதாசன் பாடியிருக்கும் '**குடும்ப விளக்கு**' ஓர் அபூர்வ இல்லற வாழ்க்கைச் சித்திரம். ஒரு கற்பலங்காரி, குடும்ப விளக்கு: குடும்பத்தில் ஒரு மனைவி தனது கடமையை உணர்ந்து உணர்ந்து, இடையருது தினந்தோறும் பணியாற்றிவரும் அருமையான சித்திரம் இது; வாழ்க்கைத் துறை முகத்தில், இல்லற தீபஸ்தம்பமாக ஒரு மனைவி ஒளி வீசுகிருள். கடமையை மறந்தவள், காதலியுமல்ல, மனைவியுமல்ல; சூரியன் உதயமாகி, கதிர்வீசி, உலகத்தைக் காத்து அந்தியில் மறைவதுபோல, ஓர் உண்மை மனைவியும், உணர்ந்து உணர்ந்து தனது கடமையை பகலும் இரவும் இடையருது செய்வதில் இன்பமடைகிருள். இந்தப் பாடல், பிரெஞ்சு

இலக்கிய முறையைத் தழுவியதாகத் தோன்று கிறது. ஆனால் பாரதிதாசன் அமைத்திருக்கும் சித் திரம், ஒரு தமிழ் குடும்ப வாழ்க்கைச் சித்திரமே: அனுபவத்தில் உதித்த சித்திரம்தான் - சிறிதும் இதில் சந்தேகமில்லை! ஓர் உத்தமமான மனைவி யின் இல்லற தருமம், இந்தப் பாட்டில் ஜோதிப்பட மாகவே சுழன்று சுழன்று வருகிறது. சின்னஞ் சிறு நிகழ்ச்சிகளும் சித்திரப் பொலிவுடன் மின்னு கின்றன. மனைவி இதய நிறைவுடன் இன்னிசையில் பாடி, தன்கணவனையும் குடும்பத்தையும் மகிழ்விக் கும் நிலையைப் பாருங்கள் :

"குளிர் விழி, இளநகைப் பூங்
குழலினள் குந்தினள் ; தன்
தளிருடல் யாழ் உடம்பு
தழுவின ; இருகுரல்கள்,
ஒளியும் நல்வானும் ஆகி
உலவிடும் இசைத்தேர் ஏறித்
'தெளிதமிழ்' பவனி வந்தாள் ;
செவிக்கெலாம் காட்சி தந்தாள் !
உள்ளத்தில் கவிதை வைத்தே
உயிரினல் எழுப்பினள் ; அவ்
வெள்ளத்தில் கலையைக் கோத்தாள் ;
தெள்ளத் தெளிந்த நீர்போல்,
செழுந்தமிழ்ப் பொருள்போய் நெஞ்சப்
பள்ளத்தில், கோடைத் துன்பம்
பறந்திடப் பாய்ச்சி விட்டாள்.
வீடெல்லாம் இசையே ; வீட்டில்
நெஞ்செல்லாம் மெருகே ; நெஞ்ச

எடெலாம் அறிவே ; எட்டின்
எழுத்தெலாம் களிப்பே ; அந்தக்
காடெலாம் ஆடும் கூத்தே ;
காகங்கள் குருவி எல்லாம்
மாடெலாம் இவ்வாருனல்,
மனிதர்க்கா கேட்கவேண்டும்?''

இது ஓர் அருமையான கவிதைச் சித்திரமல்லவா?

இனி நமது புதுக்கவியின் 'இசையமுதை'க் குடிப்போம். இந்த நூலில், இசை விறுவிறுப்புடன் சுழல்கிறது. உள்ளே வாழ்க்கையின் நிழல்கள் பிரதிபலிக்கின்றன. வண்டிக்காரன் முதல் பெண்கள் கடன்வரை, இசை துள்ளி வருகிறது; தமிழ்மொழி ஓர் உணர்ச்சி வேலாகவே வருகிறது; நாதம், எல்லா வாதங்களையும் முறியடிக்கிறது.

"தெள்ளும் தமிழில் இசைத் தேனைப்
[பிழிந்தெடுத்துத்

தின்னும் தமிழ் மறவர்
யாம் யாம் யாம் பகையே!''

நிலவைப் பற்றிய சித்திரம் புதுமை மின்னுகிறது:

முழுமை நிலா! அழகு நிலா!
முளைத்தது விண்மேலே — அது
பழமையிலே புது நினைவு
பாய்ந்தெழுந்தார்ப் போலே!
அழுத முகம் சிரித்ததுபோல்
அல்லி விரிந்தாற் போல் — மேல்
சுழற்றி எறிந்த வெள்ளித் தட்டுத்

தொத்திக் கிடந்தாற் போல்
முழுமை நிலா! அழகு நிலா!
குருட்டு விழியும் திறந்தது போல்
இருட்டில் வான விளக்கு!''

இது (Shelley) ஷெல்லியின் நிலவையே நினைவுறுத்துகின்றது. ஆனால் இது பாரதிதாசனின் சொந்தச் சித்திரம். அனுபவச் சித்திரம்.

'மழை' வனப்புடன் குமுறி வழிந்தோடுகின்றது; இது ஒரு நாத மழையாகவே தமிழிசையில் தோன்றியிருக்கிறது என்று கூடச் சொல்லிவிடலாம்.

"மழையே மழையே வனப்புடன் வா வா—நல்
வானப் புனலே வா வா; இவ்வையத்தமுதே வா வா!
..............................
தகரப் பந்தல் தணதண வென்னத்
தாழும் குடிசை சளசள என்ன
நகரப் பெண்கள் செப்புக் குடங்கள்
நன்றெங் குந்தங்கும் பய னென்ன மழையே."

'பூனைப் பாட்டு' பூனைபோல ஓடி வருகிறது: இது ஓர் இசைச் சுழல்; ஹாஸ்ய சித்திரம். பூனையின் விசித்திர வடிவமும், அதன் குணசித்திரமும் இந்தப் பாட்டில் நன்கு அமைந்திருக்கின்றன.

"பூனை வந்தது பூனை!—இனிப்
போனது தயிர்ப் பானை!
..........................................
எலி கொல்லப் பூனை தோது;—மெய்தான்
எங்கள் வீட்டில் எலி ஏது?"

இதைப் படிக்கையில், இளங்கவி கீட்ஸ் (KEATS) பாடிய பூனைப் பாட்டின் 14 வரிகளும் ஞாபகத்திற்கு வருகின்றன (Sonnet to a Cat.) கீட்ஸின் கண்ணுக்கு, பூனையின் ஒளி தெறிக்கும் கண்களும், வெல்வெட் காதுகளும், மிருதுவான உரோம உடலும்தான் வனப்புடன் மிளிர்கின்றன. பூனை இதுவரை கொன்று தின்றிருக்கும் கணக்கற்ற எலிகளையும் சுண்டெலிகளையும் நினைந்து நினைந்து பாலகவி வியக்கின்றான்.

"**ஓவியக்காரன்**" பாட்டைப் பாடிப் பாருங்கள்.

"ஓவியம் வரைந்தான் — அவன் தன்
உள்ளத்தினை வரைந்தான்!
ஒல்லி இடை எழில் முல்லை நகை இரு
வில்லை நிகர் நுதல் செல்வியை வைத்தே
ஓவியம் வரைந்தான்"

இது உண்மைக் காவியத்திற்கும் முற்றும் பொருந்தும் உண்மையல்லவா?

'பூக்காரி'யின் பூவும் பேச்சும், கற்பனை மண்டிய உணர்ச்சி யலையாகவே உதயமாகின்றன. இயற்கைக் காதலின் எழில், கும்மாளம் போடுகிறது.

குழந்தையின் '**தாலாட்டு**' ஒரு இசைத்தேன்.

பாரதிதாசன் பாட்டைப் படிக்கும்போது இன்பம் துள்ளிக் குதித்து வருகிறது; சொற்கள், கவிதா ஜீவனுடன் துள்ளி விளையாடுகின்றன.

" உவகை உவகை உலகத்தாயின் கூத்து!—வந்து
குவியுதடா நெஞ்சில்
உவகை உவகை!"

நெருங்கிய நிலையில், இது பாரதியாரைப் பின் பற்றிய சந்தம்: இசையின் வேகம் அவ்வாறு தொனிக்கிறது. அனுபவித்துப் பாடினால் உண்மை தெரியும்.

புதுக்கவி பாரதிதாஸனின் கவிதை உண்மைக் கவிதைதான் — போலிக் கவிதையல்ல; மின்னற் கவிதைதான் — ஊமைச் செய்யுளல்ல; சொற்கள் உணர்ச்சியின் ஆழத்தில் பிறந்து கற்பனையில் இன்பமாய் விழிக்கின்றன; எளிய சொற்களும் சந்தப் புயலில் சிறகடித்து வாழ்கின்றன; சில இடங்களில் கொச்சைச் சொற்களால், இலக்கிய மின்சாரம் மங்கிவிடுகிறது; பிரசார நோக்கத் துடன் பாடியிருக்கும் பாடல்களில், கவிதையின் சௌந்தரியம் மறைந்து விடுகிறது.

ஆனால் சில புலவர்கள் புனையும் செய்யுள் களில், கவிதை மணம் மருந்துக்குக்கூட அகப் படாத நிலை ஏற்பட்டு விடுகிறது. உணர்ச்சியற்ற வறண்ட நடையில் யாப்பிலக்கணம் ஊளையிடு கிறதே யொழிய, வேறு எந்த வனப்புந் தெரிய வில்லை; அவர்கள் இதயம் ஒரு மசானம், அவர்கள் மொழி ஒரு கலையிழந்த இடுகாடு; அவர்கள் எழுதுவது தந்தி நடையல்ல, தொந்தி நடை, மகோதர நடை.

'புரட்சிக்கவி'யில், பெண் வருணனை தூய தமிழில் அற்புதமாக அமைந்திருக்கிறது; அழகு ஒரு கனல், பெண்மை ஒரு கனல், கவிதை ஒரு கனல்,—ஆகவே இந்தக் கனல் வெறிக் குழம்பை ஓர் ஆண் மகன், ஒரு புரட்சிக் கவிஞன் சமாளிக்க முடியுமா?

ஓரளவு முடியுமல்லவா? இதைத்தான் நமது கவிஞர் பாரதிதாசன் அவர்கள், மிக எளிய நடையில், கவிதை மின்னலாகவே சித்திரிக்கிறார்: கன்னி அமுதவல்லி கவிதை யுலகில் புகுந்து, காதல் கர்ஜனை செய்யவே நேரிடுகிறது; வாழ்க்கை அவ்வளவு தித்திப்பாக, புரட்சிகரமாக அமைந்துவிடுகிறது; காதல் ஜ்வரத்துக்கு வேறு மருந்துமுண்டோ?

"நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தைக்
கோலமுழு துங்காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
சொக்க வெள்ளிப் பாற்குடமோ, அமுத ஊற்றோ!
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப் பிழம்போ!
உனைக்காணும் போதினிலே என்னுளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினை எழுதுதற்கு
நினைத்தாலும் வார்த்தைகிடைத் திடுவதில்லை..."

இறுதி வரிகள் வசன எல்லையில் புகுந்துவிட்டாலும் கருத்தின் வெறி துடித்துக் குமுறிக்கொண்டுதான்

இருக்கிறது: காதல் 'லாகரி' அப்படித்தான் உள்ளத்தில் பாயும் போலும்!

'மயில்' ஓர் அருமையான கவிதைச் சித்திரம்: இயற்கையின் விசித்திரம், இப்படி யெல்லாம் காட்சியளிக்கிறது, கவிஞன் கண்களில்! கவிஞன் குரல் மயிலைச்சுற்றி ஆடி வருகிறது!

"ஆயிரம் ஆயிரம் அம்பொற் காசுகள்
ஆயிரம் ஆயிரம் அம்பிறை நிலவுகள்
மரகத உருக்கின் வண்ணத் தடாகம்
ஆனஉன் மெல்லுடல், ஆடல், உள்உயிர்,
இவைகள் என்னை எடுத்துப் போயின!
*　　　*　　　*
உள்ளக் களிப்பின் ஒளியின் கற்றை
உச்சியில் கொண்டையாய் உயர்ந்ததோ
என்னவோ!
ஆடுகின்றாய்; அலகின் நுனியில்
வைத்தஉன் பார்வை மறுபுறம் சிமிழ்ப்பாய்!
சாயல்உன் தனிக்கொத்து! ஸபாஷ்! கரகோஷம்"

'மயில்' சிருஷ்டி — நீண்ட கழுத்துள்ள மயில் — இயற்கை அன்னையின் அபூர்வ லீலை — ஆம்!

சின்னஞ் சிறு சிட்டும் அணிலும், வானும் முல்லையும் கவிஞன் உள்ளத்தில் புகுந்து ஆனந்த வெறியுடன் காட்சியளிக்கின்றன. கவிஞன் சொற்கள்,— சிறு சொற்கள் — சிட்டுப்போலப் பறந்து, அணில் போலக் குதித்தோடியும் விளையாடுகின்றன.

எழுதிய கவிதையைவிட 'எழுதாக் கவிதை' அதி அற்புதமாகவே அமைந்திருக்கிறது. பொடிச் சொற்கள், காதல் மழலை பேசுகின்றன:

" கண்டெடுத்தேன் உயிர்ப்புதையல்! அதோ வந்து
விட்டாள்!
கண்டெழுத முடியாத நறுங்கவிதை அவளே!"

புரட்சிக் கவி பாரதி தாசன், புதிய கவிதையைச் சிருஷ்டி செய்கிறார்; இயற்கையாகவே செய்கிறார்; தமிழ் மொழியில், புதிய வளேவும் நெளிவும் மெருகும் ஏற்றுகிறார்; அவர் இசை வெறியில் கவிதைக் கனலுடன் பாடும்போது, நாம் எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் சலிப்பின்றிக் கேட்டு இன்புறலாம்; இது உண்மை, உண்மை, உண்மை,—மறக்க முடியாத உண்மை. ஆம்! கவிதை ஆறு, அவர் உள்ளத்தினின்று புறப்பட்டு, எங்கும் சிலிர்த்து, மின்னிக் கர்ஜித்து, உடம்பெல்லாம் தேனாறாக வழிந்தோடுகிறது. சிறந்த சொற்கள் சிறந்த முறையில் அமைவதே கவிதை என்று 'கோலரிட்ஜ்' கூறுகிறார்.

'அழகின் சிரிப்பு' தமிழ்க் கவிதையின் புதிய வனப்பை, அப்படியே சிருஷ்டி வேகத்துடன் எடுத்துக்காட்டுகிறது.

## 4

## சுத்தானந்த பாரதியாரின் " கவிக்கனவுகள் "

சுவாமி சுத்தானந்த பாரதியாரின் பாடல்களில் கவிதைச்சுவை நிறைந்தது அவருடைய 'கவிக் கனவுகள்' என்ற அரிய நூல். இதில் ஆங்கிலம், பிரெஞ்சு, இதாலியக் கவிதைப் பந்தாவை வழங்கி யிருப்பது, அனுபவிக்கத் தக்கது. ஆங்கிலத்திலும் பிரஞ்சிலும், கவிதை இயற்றும் திறமையுடையவர் தான், நமது கவிஞர் சுத்தானந்தர். ஆனல் தமிழில் தான், அவருடைய கவிதைச்சுவை உண்மை யாகவே தித்திக்கிறது. நடையில் மொழி மின்சாரம் சுழன்று திரிகிறது; ஆங்கில ஆராய்ச்சி மேதை களான [1] பிராட்லி, [2] ஜான் லிவிங்ஸ்டன் லோயிஸ் போன்றவர்கள் கூறும் ஆராய்ச்சி முறையைக் கவனித்தால் தமிழ்க்கவிதையின் உள்ளத்தை உறுதிப்படுத்த, நாம் பல வகைகளிலும் முயல வேண்டுமென்பது திண்ணம்.

அவருடைய 'என் ரோஜாம்பா' என்ற பாடலைப் பாடிப்பாருங்கள். இது ஸ்ரீ அரவிந்த மகான் ஆங்கிலத்தில் பாடியிருக்கும் 'ரோஜா' பாட்டை ஒத்திருக்கிறது.

" ஆடு ரோஜாவே - காலை
அழகு ரோஜாவே,

---

1 A. C. Bradley—2 John Livingston Lowes.

பாடுந் தென்றலுடன் - மணம்
பரவும் ரோஜாவே!
கடிய முள்ளிடையே - நீ
கனிநகை புரிவாய்.
கடிய முட்களெல்லாம் - உன்னைக்
காக்கும் வாட்கணமோ?''

'மின்னல்' பாட்டு மின்னிக்கொண்டு வருகிறது. 18 வரிகளில், மின்னல், ஆகாசத்திலும், பூமியிலும் கவிஞன் உள்ளத்திலும் விளையாடுகிறது; இருளை வெட்டுகிறது மின்னல்.

''மேகத் திரையைப் பிளந்து விரைகின்ருய் - மின்னலே
ஒரு மோகன மின்சாரங்காட்டி மறைகின்ருய் -
மின்னலே!
தாகந் தணியத் தணல்நகை செய்கின்ருய் மின்னலே,
என்னைச்
சோகத்தில் ஆழ்த்தி நீ சொக்கி மறைவதேன்?
மின்னலே!
நில்லு நில்லெனக் கெஞ்சிடுவேன் உன்னை - மின்னலே
- இங்கு
நில்லா உலகியல் வாழ்வெனச் செல்லுவாய் - மின்னலே!
சிற்றிடை துவளச் செங்கால் வீசுவாய் - மின்னலே
உன்னைப்
பற்றிக் கொள்வேனென் ருேபயந்தோடினுய்! -
மின்னலே!
தடதடவென் றிடிமுர சார்த்திட மின்னலே - நீ
நடனமாடு நயமென்ன சொல்லுவேன் - மின்னலே!''

இனி, கவிக்குருவி, என்ற பாட்டின் மொழி வளப்பைப் பாருங்கள்: கருத்து கவியின் உள்ளத்திலிருந்து குமுறிக்கொண்டு வருகிறது.

"புள்ளூருக் கொண்டு வந்தேன்—உன்னுடன்
 பொங்கி மகிழ்ந்திடவே
துள்ளு மனச் சிறகால்—வானைத்
 துருவிக் கொண்டு வந்தேன்."

"நாதக்கனவினிலே—பிடித்திருந்த
 ஞாலத்தை கொண்டு வந்தேன்
காதல் பெருகுயிரை—உனக்கே
 காணிக்கையாய்க் கொணர்ந்தேன்."

"ஆகாச வீதியெல்லாம்—சகியே
 ஆனந்த வீதியடி !
தேகச் சுமையறியோம்—கவலையாற்
 சித்தந் தளர்ந்தறியோம்."

இது ஷெல்லியின் வானம்பாடி (Skylark) போன்றது.

இனி "காலக்கன்னிகை" என்ற பாட்டைப் பாடுவோம் :

"கன்னத்திற் கையினை வைத்தொரு கன்னிகை
 கால வெள்ளத்தின் கரையினிலே
வன்னப்பொற் சித்திரப் பாவையைப் போலொரு
 வார்த்தையும் இன்றித் தனித்திருந்தாள்"

"கத்தி யெடுத்துக் குத்திடும் ஓர் அலை ;
 கனன்று செங்கனல் கக்குமொன்று
மத்த மதக்கரி போலொரு பேயலை
 வாழும் பயிரினை வாரிச்செல்லும்."

"வெள்ளைப் புயலொன்று வீசுதுபார்—அதன்
 வேகத்திரை எமன் வாகனமாம்

கொள்ளையும் சாவும் கொடுமையும் தீமையும்
கொட்ட மடித்துக் குரைப்பதைப் பார்!"

"ஊழி யிடிக்குலம் உறுமி வெங்கனல்
ஊற்றி மனிதரை வாட்டுதம்மா!
ஆழித் திரைகள் இரத்தம் பெருகி
ஹராஹரா என்றங் கலறுதம்மா!"

"காலக்கன்னியின் மணவாளன்—அவன்
காக்குங் கடவுளென்றே யறிந்தேன்.
ஞால மெல்லாமவன் லீலை யென்போன்—எந்த
நாளும் அவனையே நம்பிடுவோம்!"

'காலக்கன்னிகை' மிக அருமையான காவிய சித்திரம். இந்தப் படத்தில், 'காலம்' குழ... கதறிக் கொந்தளித்து, இறுதியில் இறைவன் உள்ளத்தில் சாந்தியடைகிறது.

சுத்தானந்தரின் கவிதையில், கருத்தின் கொந்தளிப்பில், சொற்கள் இனிய எளிய சொற்கள் சில சமயங்களில் சூறையாடப்படுகின்றன. சொற்களின் சலனத்தில், கவிதையும் குமுறிக் கரைந்து விடுகிறது. சில இடங்களில் ஊழி நெருப்பையும் ஊதியெறியும் தன்மை, அவருடைய மொழி மின்சாரத்தில் அமைந்து விடுகிறது. நல்ல கற்பனை உண்டு, நல்ல உணர்ச்சி உண்டு. நல்ல நடைவெறி உண்டு; கருத்துக்கள் உள்ளத்திலிருந்து வெடித்து வருகின்றன. உன்னத ஆராய்ச்சியில், நாம் அறிந்து கொள்ளும் உண்மைகளே இவைகள்.

'யசோதரையும் சித்தார்த்தனும்' என்ற தலைப்பில் ஒரு பாட்டைப் பாருங்கள். சித்தார்த்தன் பாடுகிறான் :

"வாடி யுதிர்ந்த மலரைக் கண்டும்
வாழ்வை நம்பவோ—கண்ணா,
கோடி யுயிரைச் சாவு நாளும்
கொண்டு போகுதே!"

சோதரை பதில் இறுக்கின்றாள் :

"உதிர்ந்த பூக்கள் உரமதாகும்;
உதிக்கும் புதுமலர்—கண்ணா
முதிர்ந்த கனிகள் வீழ்ந்து விதைகள்
முளைப்ப தியற்கையே!"

வாழ்வைப்பற்றிய சஞ்சலமும் சலனமும் இந்தச் சித்திரத்தில் சுழன்று சுழன்று வருகின்றன. துன்பத்தை விளக்கும் இன்பச்சித்திர மல்லவா இது! இசைச் சித்திரமும் கூட!

# 5

## ஸ்ரீ யோகியார்

ச. து. சுப்பிரமணிய யோகியாரின் 'தமிழ்க் குமரி பாடல்கள்' புதிய சிருஷ்டியில் சேர்ந்ததுதான். சில பாடல்கள் மிக அருமையாகவும், சில சாதாரண இனத்தைச் சேர்ந்ததாகவும் தெரிகின்றன. சொந்த சிருஷ்டியான 'அகல்யா'வும், மொழியெபர்ப்புக் கவிதையான உமர்கயாம் பாடல்களும்,

நல்ல விறுவிறுப்பும், யாப்பின் அமைதியும் சொல்லோவிய எழிலும் பெற்று விளங்குகின்றன.

"தெள்ளு மதுக் கள்ளும்
முத்தமிடும் தேன் இதழும்
துள்ளு மற்றைப் பொருள் போலத்
தோன்றிப் பின் அழிவதெனில்,
நேற்று வரை இருந்தபடி
இன்றிருக்கும் நீர்மையினல்
ஊற்று மதுப் போதையிலே
ஒரு நாளும் குறையோமே"

(உமர்கயாம்—42)

பொடிப் பாடல்கள், ஸ்டார் சன்னங்களாக ஒளிர்கின்றன. 'கண்மணி ராஜம்' ஒரு நிகரற்ற சோகச்சித்திரம்; சொற்கள், கண்ணீர்த்திவலைகளைச் சுமந்துகொண்டு, மறைந்த குழந்தையின் இன்ப லீலைகளைச் சுற்றிச் சுற்றிக் கதறிக்கொண்டு வருகின்றன; 'காசில்லாக் கனகரத்னம்', ஒரு வறுமைச் சூறுவளி.

'கண்ணகி'யின் கற்புக் கனல் ஓர் அரிய கவிதை மின்னல்:

"கையில் ஓர் சிலம்பு தாங்கி,
காலிலே சூறை தாங்கி,
மெய்யிலே நெருப்புத் தாங்கி,
விழியில் தீக்கணைகள் தாங்கி,
தையலாள் கோபம் தாங்கித்
தமியளாய்ப் போதல் நோக்கி,

ஐயமில் அறமும் கண்ணீர்
அலக்கணுற்று அழுத மாதோ.''

'மேரிமக்தலேனு' - ஒரு நிகரற்ற கவிதைக் கடல்; பெண்மையின் அழகு, காமத்திரையின் பின், கும்மாளியிடுகிறது; சொற்கள், பெண்மையின் கூந்தல் முதல் குதிகால் வரை, அழகியின் விசித்திர அழகை வேகமாக அருமையாக வருணித்துக் கொண்டே செல்கின்றன; உணர்ச்சியின் கதி அபாரமாக இருக்கிறது; பெண்மையின் உடலைச் சுழற்றியும் கழற்றியும் காட்டும் ஆற்றல் பெற்ற அபூர்வ மணிச் சொற்கள், மையலையும் மோகத்தையும் முடிவான சோக மந்திரத்தையும் அப்படியப்படியே சித்திரித்து முன்னேறுகின்றன. சுடு சரம் போன்ற சொற்கள், உணர்ச்சிக் கனலையே உமிழ்கின்றன.

மாம்பழம் ததும்பு செம்பொன்
மலை திரண்ட கொங்கையில்
தேம் பொதிந்த குங்குமச்
செழுங் குழம்பு பூசினர்,
பாம்பிரண்டு நெளிவ போன்று
பாயும் ரோம பந்தியில்
காம்பு கொண்டு கற்பகக்
கொழுந்து மின்னல் காட்டினர்.

* * *

காலில் சுவை, தலையில் சுவை,
கணுவில் சுவை காட்டிப்
பாலில் சுவை போல் எங்கணும்
பதியும் சுவைக் கன்னல்,

ஆலித் தெழும் அமுதக் கடல்
கடையத் திரள் வெண்ணெய்
போ லொத்தது வெயிலில் பட
உருகாத் தளிர் மேனி.''

# 6

## இராமலிங்கம் பிள்ளை

**நா**மக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள், தமிழன் இதயத்தை நன்கு உணர்ந்தவர்கள். அதனால் தான், அவர்களுடைய பாடல்கள் 'தமிழன் இதயம்' என்ற மகுடத்தில் வெளிவந்திருக்கின்றன. இதுவரை ஐந்து பதிப்புகள் வந்திருப்பதால், சாதாரண தமிழனும் வாங்கிப்படிக்கும் நிலையில், எளிய இனிய தமிழ் நடையில் அமைந்திருக்கும் தன்மை தான் அதற்குக் காரணம். சின்னஞ் சிறு வெள்ளைச் சொற்கள், களங்கமற்ற இதயத்தினின்று எட்டிப் பார்க்கின்றன; கவிஞர் இதயத்தில் ஊறி வருகின்ற இசையலைகளோடு தலைதூக்கி வருகின்ற கவிஞரின் இனிய சொற்றொடர், தமிழ் மொழியின் ஆற்றலையும், தேசவிடுதலையின் அவசியத்தையும். மகாத்மாவின் மகோன்னதமான அகிம்சா தத்துவத்தையும் வற்புறுத்தி முன்னேறுகின்றது.

'' திலகர் விதைத்த வித்து பாரதியாக முளைத்தது.
காந்தி தூவின விதை நாமக்கல் கவிஞராகத்
தோன்றியது.''

என்று ஸ்ரீ ராஜாஜி அவர்கள் ஆழ்ந்த அனுபவத்தினின்று முடிவு கட்டி விட்டார்கள். இது முற்றும் உண்மை தான்.

> " பலே பாண்டியா ! பிள்ளை !
> நீர் ஒரு புலவன் ஐயமில்லை "

என்று மகாகவி பாரதியார் வாழ்த்தியிருக்கிறார்.

'இற்றைத் தமிழன் இதயத் துடிப்பினை இச் சொற்றரு சித்திரத்தில் தோன்றவைத்தான்' என்று 'தேவி' அவர்கள் உண்மையை எடுத்துக் காட்டி விட்டார்கள்.

" கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர் (கத்)

* * *

ஒண்டி அண்டிக் குண்டுவிட்டு
உயிர்பறித்த லின்றியே
மண்டலத்தில் கண்டிலாத சண்டை
யொன்று புதுமையே.

* * *

காந்தியென்ற சாந்தமூர்த்தி
தேர்ந்துகாட்டும் செந்நெறி
மாந்தருக்குள் தீமைகுன்ற
வாய்ந்ததெய்வ மார்க்கமே."

இந்தப்பாடல் தான், நாமக்கல் கவிஞருக்கு ஆரம்ப வெற்றிக்கும் புகழுக்கும் காரணம். இந்த அருமை

யான பாட்டை, எத்தனை முறை வேண்டுமானாலும் சலிப்பின்றிப் படிக்கலாம். சிறு குழந்தையும் ஆனந்தமாக இசையின்பத்தோடு படிக்கக் கூடிய பாட்டு: உள்ளே கிடப்பது உள்ளொளியின் உண்மை, ஆம் உண்மையின் அகண்ட ஆழ்ந்த நிலை.

சிருஷ்டி ரகஸ்யத்தைப் பற்றிய பாடல் "யாராலே?" - எளிய இனிய சந்தத்தில் சுழன்றோடுகிறது:

"சூரியன் வருவது யாராலே?
சந்திரன் திரிவது எவராலே
காரிருள் வானில் மின்மினிபோல்
கண்ணிற்படுவன அவை என்ன?
பேரிடி மின்னல் எதனாலே?
பெருமழை பெய்வது எவராலே?
ஆரிதற் கெல்லாம் அதிகாரி?
அதை நாம் எண்ணிட வேண்டாமோ?"

'முருகன்' பாட்டு தெளிந்த நீரோடை போல, அற்புதமாக, கவிஞரின் களங்கமற்ற பளிங்கு மனத்தைப் பிரதிபலிக்கிறது. சொற்கள் முருகனைச் சுற்றி வரும்போது, நாம் ஒரு உயர்ந்த தத்துவத்தையே தரிசிக்கிறோமல்லவா?

முருகனென்ற சிறுவன்வந்து
முணுமுணுத்த சொல்லினால்
முன்னிருந்த எண்ணம்யாவும்
பின்னமுற்றுப் போனதே

அருகுவந்து மனமுவந்து
அவனுரைத்த ஒன்றினால்
அடிமை யென் மனத்திருந்த
அச்சமற்றுப் போனதே

* * *

அன்பனந்த முருகன்வந்
தழைத்திருத்தி என்னையே
அஞ்சல் அஞ்சல் அஞ்சலென்
றகங்குழைந்து சொன்னதால்
துன்பமிக்க அடிமைவாழ்வில்
தோய்ந்திருந்த என்மனம்
சோகம்விட்டு விடுதலைக்கு
மோகமுற்றி விட்டதே.''

'முருகன் மேற்காதல்' என்ற பாட்டு, பிரமாதமாக இருக்கிறது. இசையினுள் பாய்கின்ற உண்மை, இறைவன் குரலையே எட்டிப் பிடிக்கிறது. பெண்கள் பாடினால், இனிய குரலில், இசையின் எழில் மங்காமல் மின்னிக் கொண்டுவரும்.

கவிஞரின் தேசீய கீதங்கள், அற்புதம் :

'' திருமுடி சூட்டிடுவோம் - தெய்வத்தமிழ்
மொழிக்கு (திரு)

இது ஒரு அருமையான இசைப்பாடல்.

தமிழிசையின் சிறப்பைப் பாருங்கள் :

'' நாதமெனும் பிரமத்தைப் பணிவோம் ; ஆனால்
நாமறியா மொழியில் நமக்கேது நாதம்
கீதமென்று புரியாத பாட்டைக் கேட்டுக்
கிளர்ச்சிபெறு உணர்ச்சியிலே கீதம் எது ?

'ஜவாகர்லால்' பாட்டு அருமையாக உண்மையே பேசுகிறது :

" வாழையைப் போல் பிறர்க்குதவி வருத்தம்
தாங்கி
வறியவர்க்கே கனிந்துருகும் வரிசைக்காக
வாழிஜவார் வாழிஜவார் வாழியென்று
வாழ்த்திசைக்கும் மன்னனெங்கள்
ஜவஹர்லாலாம் ".

'தமிழன் இதயம்' என்ற நூலில் உள்ள அருமையான இசைப்பாடல்களை, கிராமபோன் கம்பெனியில் ரிகார்டுகளாகத் தயாரித்துப் பள்ளிக்கூடங்களில் மாணவ - மாணவிகளின் செவிகளில் தமிழிசை மழையாகப் பெய்தால், கல்வித் திட்டத்தில், மொழிப் பகுதியில், இசைக்குறிப்பில், சிறந்த இன்பத்தை அடைய ஒரு சாதனம் ஏற்படும்.

கவிஞரின் பாடல்களில், கவிதை நலத்தை விட, இசையின்பமே அதிகம்.

## 7

## 'சோமு'வின் 'இளவேனில்' கவிதைகள்

'**சோமு**'வின் கவிதைகளில், செந்தமிழின் எழிலும், ஆங்கிலக் கவிதையின் கருத்தும் கதியும் கலந்திருக்கின்றன. பழமையும் புதுமையும் உறவு கொண்டு, உறுதிபெற்று நேரே பேசுகின்றன. எளிமையும் இனிமையும் கலந்த இசையோவியம்:

அவர் பாடல்களைத் தமிழ் மகளுக்கு ஒரு ஸ்ரீதனம் என்று ரஸிகமணி டி. கே. சி. அனுபவித்துக் கூறுகிறார்கள். சோமு வின் கவிதைகளில், சொல்லும் விதத்திலும் வடிவத்திலும் ஒரு நூதனத் தெளிவு நிலவுகிறது. திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள், முன்னுரையில் கூறுகிறார்கள்: "இப்பாடல்களில் எளிய சொற்களே உள்ளன. ஆனால் எத்தனையோ ஆற்றல் வாய்ந்தன. இவற்றை இசையோடு, பொருளுணர்ச்சியோடு, நாம் பாடும்போது ஊனையும் உயிரையும் உருக்கும் தன்மையதாய் இவ் ஆற்றல் சிறந்து நிகழ்கின்றது."

"வானம் சிரித்தது, வையம் சிலிர்த்தது,
வந்த(து) இளவேனில்; வந்த(து) இளவேனில்;
கானம் ஒலித்தது, கான்மலர் நகைத்தது,
காயு(து) இளவேனில்; காயு(து) இளவேனில்"

## 'மதுக்கிண்ணம்' ஒரு அற்புதமான கவிதை ஸ்டார்:

இறந்த காலத் துயரொழிய
எதிர்கா லத்தின் நினைவழிய
மறந்து மதுவில் ஆழ்ந்திடவே
மதுவின் கிண்ணம் ஏந்திடம்மா!

* * *

வருவாய் பெண்ணே என்னருகே
வந்து மதுவை வாழ்த்திடுவாய்
தருவாய் சுவைசேர் அதரத்தால்
தளிர்க்கு முத்தத் தண்மையினை!

* * *

'மதுக்கிண்ணம்' ஒரு அற்புதமான கவிதை ஸ்டார்:

மனமே மதுவில் முழுகிடுவாய்
மதுவால் துயரைக் கழுவிடுவாய்
மனமே மதுவைத் துதித்திடுவாய்
மதுவில் விழுந்து குதித்திடுவாய்

"வர்ணக்கனவு - கவிதைப் பெண் - இன்பம் - தாரகை - பொழுது சாயுது - மனமும் மரணமும் - காதல்நாயகி - கைலயங்கிரியில் - மரணம் - பின்னற் சடை - மழை - ஓய்விலாக்காலம்" - எல்லாம் அற்புத மான எளிய இனிய கவிதை நலங்கொண்ட இசைப் பாடல்கள்: ஒவ்வொன்றிலும், தனிப்பட்ட கவிதை எழில் பொங்கி வழிந்தோடுகின்றது; கவிதை வெறி எங்கும் குமிழியிட்டு நிற்கின்றது, கரை புரண் டோடுகிறது. சொற்கள் - 'சோமு'வின் இனிய எளிய சொற்கள் - மனித இதயத்துக்கு சாந்தி யளிக்கின்றன. சலிப்பே தட்டாத, சாகா வரம் பெற்ற கவிதை இலக்கியம்தான்:

'கன்னி' என்ற பாடலைப் பார்ப்போம்:

"கன்னிப் பருவத்துப் பெண்மயிலே — உந்தன்
கட்டழ கெல்லாம்வீ ணாகுதடி
மின்னி ஒளிவிடும் மேனியளே — உந்தன்
மின்னலெ லாம்வீணே போகுதடி
பின்னிப் படர்ந்ததோர் காட்டினுள்ளே — வாசப்
பிச்சி மலர்க்கொடி பூத்ததுபோல்

மன்னி உயர்மலை உச்சியிலே — கொண்டு
வைத்ததோர் தீஞ்சுவைத் தேனடைபோல்
[கன்னிப் பருவத்துப் பெண்மயிலே
பாலைவனத்திலே பால் பொழியும் — குளிர்
பௌர்ணமிச் சந்திரன் தானோநீ ”

‘கவிதைப்பெண்’, கவிஞனையே கண்டு மயங்கி, மோகமுற்று, புன்முறுவல் பூத்து நிற்கும் காட்சி அபூர்வமான காட்சிதான்! ஆம்!

## இரண்டாம் பாகம் — கவிதை வெறி *

# 1

## ‘தேவி’ யும் உமர் கயாமும்

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள், உயர்ந்த அருட்கவிதை செறிந்து விளங்குபவர்கள். பாரசீகக் கவி ‘உமர் கயாம்’ கவிதைப் பண்பு நிறைந்த உள்ளம் படைத்தவர். அவர் பாரசீக பாஷையில் பாடிவைத்த ‘ரூபையத்’ (RUBAIYAT) என்ற தத்துவப் பாடல்களை ஆங்கிலக்கவி ‘பிட்ஜெரால்டு’ (FITSZERALD), மொழி பெயர்த்தார். இந்த ஆங்கில மொழி பெயர்ப்பைத் தழுவியே, நமது கவிமணி அவர்கள் தமிழில் அதே கருத்துக்களை ஆர்வத்துடன் ஜீரணித்து, நமது தமிழ் மொழியில் அழியாத அமுத நடையில் பாடி வைத்திருக்கிறார்கள். நமது பிள்ளையவர்கள் பாட்டில், ஒரு அபூர்வக் கவிதை மின்னலும், இன்பச் சிலிர்ப்பும் சுழன்று நமது இதயக் கடலையே முற்றுகையிடுவதைக் காணலாம். உயர்ந்த நுட்பமான வெள்ளைச்சொற்கள், நமது உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன. சின்னஞ்சிறு சொற்கள் தத்துவப் பூங்கொடிகளாகப் படர்ந்து வருகின்றன.

பிட்ஜெரால்டின் முதலாவது மொழிபெயர்ப்பு 75 பாட்டுகள் அடங்கியது; அவர் செய்த இரண்டாவது மொழிபெயர்ப்பு 110 பாட்டுகள் அடங்கியது. நய

மான, முக்கியமான கருத்துக்களை, நமதுநாட்டுக்குப் பொருந்திய மொழியில், பிள்ளையவர்கள் 61 பாட்டுகளில் பாடிவைத்திருக்கிறார்கள்: அவை, "நிலையின்மை, உயிரின் சிறுமை, உயிர் ஒன்றே, உலக இயற்கை, விதி, செயலின் பயனின்மை, காலை, வாழ்க்கையின்பம், வாழும்வகை" முதலியவை பற்றிய பாடல்கள்.

சொற்கள், கவிஞனின் இதயக் கடலில் நீந்தி வருவது போலத் தெரிகிறது. சொற்கள் இதய முத்திரையுடன் பிறந்து வளர்ந்து உண்மைக் கொடி தாங்கி நிற்கின்றன: களங்கமற்ற புனிதமான சொற்கள், கலைவாணியின் நெற்றியில் மின்னுகின்றன. 61 பாட்டுகளையும் ஒரே மூச்சில் படித்தால், இன்பத்தின் உச்சியைக் காணலாம். விட்டு விட்டுப் படித்தால், இன்பம் சிதறிப் போகும்.

"நிலையின்மை" என்ற தலைப்பின் கீழ் 7-வது பாட்டைப் பார்ப்போம்:

*வீடும் பழவீ டாகுதடா*
*விட்டம் கூரை சுவரெல்லாம்*
*ஆடி யலைந்து விழுநாளும்*
*அண்டி அண்டி வருகுதடா*
*நாடி யிதனை யின்னும்நீ*
*நம்பி மோசம் போகாமல்*
*பாடிப் பாடி எம்பெருமான்*
*பாதம் போற்றி வாழ்வாயே.*

“ உயிரின் சிறுமை ” யைப்பற்றிய 11 - வது பாட்டைப் பாருங்கள் :

மண்ணை மண்ணில் உதறிவிட்டு
மாசு மறுவொன் றில்லாமல்
விண்ணிற் செல்ல வல்லதெனில்
விளங்கும் ஆன்மா இப்புவியில்
நண்ணி இந்த நாள்வரையும்
நலிந்து சிறையில் இருந்ததனை
எண்ணி வெட்கம் அடையாதோ
இதன்மேல் வெட்கம் வேறுண்டோ

“ உயிர் ஒன்றே ” என்பதைப்பற்றிய 16, 17 - வது பாட்டுகளைப் பாருங்கள் :

மண்ணை ஒருநாள் ஒரு குயவன்
மயக்கிப் பிசையும் வேளையிலே
திண்ணை யருகு சென்றிருந்தேன்
செய்யுந் தொழிலும் கண்டிருந்தேன்.

*　　*　　*

உண்ட வெறியில் முன்னொருநாள்
உண்ட கலத்தை உடைத்தெறிந்தேன்
துண்டுதுண்டாய்ப் போன கலம்
துணிந்து மெல்ல எனை நோக்கிப்
‘பண்டு யானும் உன்வாழ்வைப்
பாரில் அடைந்தேன் நீயுமெனக்
கண்டும் இந்த வாழ்வையினி
அடைவாய் உண்மை’ என்ற தர்மா.

இனி ‘ விதி ’யைப் பற்றிய 26, 28, 30-வது பாட்டுகளைப் படித்துக் கருத்தின் ஆழத்தையும்

மொழி மின்சாரத்தையும் அலசிப்பார்த்து இன்புறுங்கள்:

வந்த வந்த மனிதரெலாம்
  வளைவும் நெளிவும் கண்டென்னைச்
சந்த மில்லாப் பானையெனத்
  தள்ளி வைத்துச் சென்றனரால்
அந்த நாளக் குயவன்கை
  ஆட்டத் தாலே நேர்ந்தபிழைக்
கிந்த நாளில் ஏழை எனை
  ஏனோ குறைகள் கூறுவரே.

*　　　*　　　*

எல்லாம் இங்கோர் சூதாட்டம்
  இரவும் பகலும் மாறுமட்டம்
வல்லான் விதியே ஆடிமகன்
  வலியில் மனிதர் கருவிகளாம்
சொல்லா தெங்கும் இழுத்திடுவான்
  ஜோடி சேர்ப்பான் வெட்டிடுவான்
செல்லாதாக்கி ஒவ் வொன்றாய்த்
  திரும்ப அறையில் இட்டிடுவான்.

*　　　*　　　*

எழுதிச் செல்லும் விதியின்கை
  எழுதி எழுதி மேற்செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும்
  சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னாய் நீங்கியொரு
  வார்த்தை யொன்றை மாற்றிடுமோ
அழுத கண்ணீ ராறெல்லாம்
  அதிலோர் எழுத்தை அழித்திடுமோ."

விதியின் சுழற்சியைக் காட்டி நிற்கும் சொற்கள் கறங்குபோல் சுழல்கின்றன : விதியின் சுடுசரமோ என்று நாம் ஐயுறுகிறோம்.

"செயலின் பயனின்மை" என்பது பற்றிய 44-வது பாட்டைப் பாருங்கள் :

திட்டிக் கதவு தெரிந்ததடா
திறவுகோலும் இல்லையடா
கட்டித் திரையும் கண்டதடா
கண்ணும் மயங்கி நின்றதடா
ஒட்டிச் சிறிது நீ நானென்
றுரைத்த உரையும் கேட்டதடா
நட்ட காலம் பின்னையடா
நான்நீ யற்றுப் போச்சுதடா.

இனி 'வாழ்க்கை யின்பம்' பற்றிய 48-வது பாட்டைப் படியுங்கள் :

வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசுந்தென்றற் காற்றுண்டு
கையிற் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுமுண்டு
வையந் தருமிவ் வனமன்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ,

இனி 'வாழும் வகை' யைப்பற்றிய 59,61-வது பாட்டுகளை ஊன்றிப்படித்து இன்புறுங்கள் :

ஆழி சூழும் உலகாளும்
அரச னாக வேண்டுமெனில்
வாழும் வாழ்வில் உன்னையும் நீ
மறந்து வாழ வேண்டுமடா
ஏழை யாகி எளியவரின்
எளிய னாக வேண்டுமடா
தோழனாகி யாவர்க்கும்
தொண்டனாக வேண்டுமடா.

* * *

ஈசன் அருளைப் பெறுவதிலும்
இடையே தரகர்க் கிடமுண்டோ
பேசின் இவர்செய் சூதுலகில்
பெரிய சூதென் றறியாயோ
பூசு நீறும் தாவடமும்
புரிமுந் நூலும் பூண்டதலால்
காசு பணத்தின் ஆசையவர்
கடந்த தில்லை இல்லையடா.

ஆஹா! எவ்வளவு பெரிய உண்மைகள், எவ்வளவு எளிய சொற்களில் உதயமாகின்றன, பார்த்தீர்களா? இதுதான் உண்மைக் கவிதையில் மின்னி உதயமாகும் சிருஷ்டிச் சிறப்பு! உள்ளே தெளிந்து வெளியே மின்னிச் சுழன்று வருவது! 'தேவி'யின் மொழியில், ஊமைச் சொற்கள் இல்லவே இல்லை! கவிமணியின் சொற்கள், இதய மலர்கள், இதய மழை மின்னல்கள்! கருத்தின் நீண்ட தங்க மின்னலை, எடுத்துக்காட்டும் சொற் கொண்டலே இந்தப் 'பாரசீகக் கவியமுதம்'.

ஆராய்ச்சித் தராசில், 'தேவி' யவர்களின் கவிதை யுள்ளத்தை வேறு யாராலும் மிஞ்சமுடியாது என்பது எனது அனுபவ உறுதி.

# 2

## ஷெல்லியும் சுத்தானந்தரும்

**எ**தையும் கவிதையென்று எண்ணுவது தவறு. கவிதையில் உண்மையுண்டா, கற்பனை ஒளியுண்டா, உணர்ச்சியுண்டா, மொழிஞாலம் உண்டா, உவமையணியுண்டா, தளை சீர் மோனைக்கு அடிமையின்றி காவிய விண்ணிற் பறக்கும் ஆற்றலுடையதா? — இவைபோன்ற கேள்விகளே இரஸிகர்களின் ஆராய்ச்சித் தத்துவம் நிறைந்த கேள்விகள்.

ஆங்கிலக்கவி ஷெல்லி (SHELLEY)யும், சுத்தானந்த பாரதியாரவர்களும் உண்மைக் கவிதையை நன்கு உணர்ந்தவர்கள்; அருளுடன் பாடிப்பாடி, ஆராய்ச்சித் தராசிலும் நிலைத்து நிற்கும் பேராற்றலுடையவர்கள். பாடுவதென்ருல், வாய்க்கு வந்தபடியெல்லாம் பாடுவது கவிதையல்ல. சிலர் இஷ்டம்போல, சொற்களை அடுக்கியடுக்கிப் பார்த்துப் பாட்டுக் கட்டுகிருர்கள்; அருளாவேசமின்றி இப்படிச் செய்யப்படும் செய்யுள், இலக்கண வரம்பிற்குள் அறிவின்றிப் புலம்பிக்கொண்டிருந்தாலும், உண்மைக் கவிதையின் எல்லையில் நுழையவே முடியாது. கள்ள நாணயங்கள்போல, போலிப் பாட்டு

கள் ஒலிக்குறைவாலும், உண்மைக் குறைவாலும், தங்கள் போலி நிலையைக் காட்டிக்கொண்டே நிற்கும். உண்மைக் கவிதையில், வாழ்க்கைச் சித்திரம் தவழ்ந்து மின்னி வட்டமிடும், அது ஒரு கற்பனைக் களஞ்சியம்; உணர்ச்சிக்கடல்; இசை அருவி; சொற்களின் இன்பத் திருவிளையாடல்; கேட்போர் காதைக் கொஞ்சி முத்தமிடும்.

பிரெஞ்சு ஆராய்ச்சி நிபுணர் வால்டேர் (VOLTAIRE) என்ற பெரியார், நிறைந்த பன்மொழிப் புலமையுள்ளவர்; அவர் உலகத்திலுள்ள பல்வேறு ஐரோப்பிய மொழிகளையும் கற்று, ஒவ்வொரு பாஷையின் இரகசியம் என்ன என்பதையும் உணர்ந்தவர். அவர் சொல்லுகிறார்: "எந்த பாஷையையும் நாம் நிறைமொழியாகக் கொள்ள முடியாது. நம்முடைய சகல கருத்துக்களையும் பலவித உணர்ச்சிகளையும் மூலஜோதியுடன் பூர்ணமாய் வெளிப்படுத்த முயலும்போது, எந்த மொழியும் இந்த மனநிலையைச் சித்திரிக்கும் ஆற்றலோடு பிறக்கவில்லை. மனிதனின் மனநிலை வளர வளர, நாகரிகம் வளர வளர, கலை வளர வளர, மொழியும் அதைப் பின்பற்றி வளர்கிறது. ஆத்ம நிலைக் கண்ணாடியாகப் பிரதிபலிப்பதே, உயர்ந்த மொழியின் இலட்சியம்."

மொழியின் நிலையே இப்படியிருக்கும்போது, ஒரு உண்மைக் கவியின் சன்னதமொழி எப்படி அமையும்? ஆங்கிலக்கவி ஷெல்லி (Shelley) கவிதை

யைப் பற்றி ஒரு நீண்ட விரிந்த ஆராய்ச்சி எழுதியிருக்கிறார்.—'Defence of Poesy' (1820). கவிதையின் உண்மையை, ஆழமாக, மிக நுட்பமாக, 58 பக்கங்களில் இந்தக் கட்டுரையில் ஆராய்ந்து பேருண்மைகளை யெல்லாம், உலக மொழிகளுக்கெல்லாம் பொருந்த எடுத்துக் காட்டுகிறார். இந்தக் கட்டுரை முழுதுமே, மொழிபெயர்த்தால், தமிழர்கள் பெரும் பயனடைவார்கள் என்பது உறுதி. இந்தக் கட்டுரையில், ஷெல்லி வற்புறுத்தும் உண்மைகள் :

(1) நிறைந்த மனோபாவம் வேண்டும். (2) கற்பனை நிறைந்து பொலிவுடன் திகழவேண்டும். (3) உணர்ச்சிக் கண்ணாடியாகவே கவிதை கவிஞனின் உள்ளத்தைப் பிரதிபலிக்கவேண்டும். (4) எதுகை, மோனை, சீர் முதலியவற்றில், உண்மைக் கவிதை சிக்குண்டு தவிக்கலாகாது. (5) மொழி சுதந்திரத்துடன் மின்னிப் பறக்கவேண்டும். சொற்கள், கவிஞனின் உள்ளத்தில் ஊறிப் பிறக்க வேண்டும். சன்னதச்சுடர் கோபுரங்களாக ஓவிய லீலையாக வெளிவருவதே உண்மைக் கவிதை. (6) இடம்பமாக யாப்பிலக்கணப் பிறவியாகப் பிறக்கும் அருளற்ற, அழகற்ற கவிதை உண்மைக் கவிதையாகாது. (7) ஒரு உண்மைக் கவியே, நீதிச் சுரங்கம், உணர்ச்சிச் சிற்பம், வருங்கால ஞானி, இசைப் புலியுங்கூட. (8) இயற்கையுடன், கவிஞன் தன் இதயக் கலையையும் கலந்து புதுப்படம் தீட்டுகிறான். (9) போலிக் கவிதை

யெல்லாம், ஊமைக் கவிதைதான். (10) கவிதையின் ஜீவநாடியான கற்பனை எதையும் சூழ்ந்து கொண்டு உலகத்தையே முற்றுகையிடும் ஆற்றல் பெற்றது. (11) கவிஞனின் மொழியில், சிருஷ்டிச் சிறப்பு துடிக்கவேண்டும். (12) உணர்ச்சி புரட்சியாக மாறும்போது, சொற்கள் புதுவர்ணம் பெற்று, இரத்தத் துடிப்புடன் கொந்தளித்துக் குமுழியிட்டுத் துடித்துக் குமுறிக்கொண்டு வரவேண்டும்.

உண்மைக் கவியின் உண்மைத் தத்துவத்தை உடலிலும் உயிரிலும் கலந்து பருகியவர்கள், ஷெல்லியும் சுத்தானந்தரும். ஷெல்லியின் வானம் பாடி (Sky-Lark) இசை விண்ணிலே சிறகடித்துப் பறக்கிறது; ஒரு கவிஞனின் உள்ளத்தையே பிரதி பலிக்கிறது; கலையுள்ளம் நிறைந்த இசைப்பறவை, உடற்சுமை மறந்து, கவலைமறந்து, கலைநிறைந்து, இசைநிறைந்து, நிலவைப்பருகி, காதல் கீதத்தையும் இறுமாப்புடன் இன்பமாய் அருந்தியருந்திப் பித்துப் பிடித்த நிலையில் ஆகாசத்தின் அகண்ட வெளியையே முற்றுகையிடுகிறது. வானம் பாடியின் இசைமழை, உச்சியிலிருந்து புயலாகவே வழிந்தோடுகிறது. மனிதன், கவலை மண்டிய நிலையில், கலையின் ஜோதியையே மறந்து விடுகிறான்.

ஷெல்லியின் மேகஜாலம் 'Clouds' வருணக் களஞ்சியம்; சொற்கள், மேகத்தோகைகளாகவே வருணம் பெற்று மிளிர்கின்றன. சூரியன், சந்திரன், புயல், நெருப்பு, பனி, நட்சத்திர மின்மினி

கள் எல்லாம் மேகமண்டலத்தில் பிறந்து மறைந்து, ஒளிவீசி இறுதியில் கவிஞனின் உள்ளத்தில் ஒளிந்துகொள்ளுகின்றன. மேகத்திரையைத் திரித்துக்காட்டும் மின்னற் சாட்டை, மொழி மின்னலாகவே விளையாடுகிறது. ஷெல்லியின் 'மேல்காற்று' (*Ode to the West Wind*) ஊதிப்புலம்பி, அழுது கதறி, குதித்துக்குமுறி, நாதப் பிரம்மமாகவே ஜனித்துவிடுகிறது. புயல் புலம்பி வீறிட்டு அலறிச் சாந்தக் குன்றில் ஒடுங்கும்போது, மொழிப்புயலும் சாந்தமடைகிறது.

இனி, சுத்தானந்த பாரதியாரின் கவிக்கனவுகளை ஆழ்ந்து அனுபவிப்போம்: "இன்பக்கனவு, அமுதம், கலையெழுச்சி, எனது காதலி, கவியும் கனலும், என் ரோஜாம்பா, மின்னல், காலக்கடல், கர்ச்சனை, கதிரவன் சிரித்தான், அழகுத்தெய்வம், தென்றலுடன் கொஞ்சுதல், வெள்ளித் திங்கள், நிலா விளையாட்டு, புன்னகை வெள்ளம், வான் விளக்கம், குயிலும் கூண்டுக்கிளியும், பறவை இன்பம், கவிக்குருவி, அருவிப்பாட்டு, அறிவொளி, கோனார் பாட்டு, சித்தார்த்தன், பூகம்பம், கவியும் காலனும், உதய ராகம், இந்திர கானம்"—முதலியன சுவாமிகளின் கவிக்கனவுக் கோவைகள். கவிதைக் குழலை, இசையாழ் கொஞ்சிக் குலாவுகிறது. கற்பனை, ஜோதிக்குன்றாகவே கதிர் வீசுகிறது; உணர்ச்சிக் கடல் புலம்பிக் குமுறிக் கர்ஜிக்கிறது. கவிஞனின் புதுச்சொற் கோவைகள், இதய

வெள்ள அலைகளாகக் கரைபுரண்டோடுகின்றன. இசைத்துமி தெறிக்கிறது. ஆழ்ந்த கருத்துக்கள் நிறைமொழியில் தவழ்ந்து உல்லாசமாய்ப் பாடிக் குந்துபோட்டு வருகின்றன, ஒரு பாட்டைப் பார்ப்போம், பாடியே பார்ப்போம் :

கவிக்கனவுகள் (23) பறவை இன்பம்

## பறவை இன்பம்

1 சின்னஞ் சிறு வுடலாம்—கூர்ந்த
செங்கனிபோல் அலகாம் ;
வன்னப் பசுஞ் சிறகாம்—இரு
மாயக் கருவிழியாம் ;
சன்னக் குறுங் காலாய்—இந்தச்
சாந்தக் கிளிபோலே
என்னுயிர் வாழாதோ ?—கவலை
யின்றித் திரியாதோ ?

2 சோலைக் கனியுண்பேன்—ஈசன்புகழ்
சொல்லிச்சொல்லி மகிழ்வேன்,
காலை மலருடனே—கொஞ்சுங்
காற்றுடன் கொஞ்சிடுவேன் ;
மாலைச் சிவப்பினிலே—ஆகாய
வங்க மெனப் பறப்பேன் ;
வேலைக் கடலையுழும்—படகின்
மீது நடந்திடு வேன்.

3 பஞ்ச மெனக் குண்டோ ?—வயிற்றுப்
பார மெனக் குண்டோ ?

வஞ்சமெனக் குண்டோ?—விசன
வாடை யெனக் குண்டோ?
அஞ்சாது காதலிப்பேன்—என்
அன்புப் பெடை யுடனே
குஞ்சுக் கிரை கொடுப்பேன்—சுதந்தரக்
கூடு கட்டி வளர்ப்பேன்.

ஜெர்மன் ஆராய்ச்சி நிபுணர் (Schlegal) ஸ்கிளீ கலைப் பின்பற்றி இலக்கிய ஆராய்ச்சி எழுதிய ஆங்கில மேதை (Coleridge), ஷேக்ஸ்பியரைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்: "உண்மைக் கவிதையில் அறிவு மலர்கிறது; சிந்தனை மலர்கிறது; மனித ஆர்வம் மலர்கிறது; உணர்சிகள் மலர்கின்றன; மொழியும் விரிந்து மலர்கிறது; எல்லாம் கலந்து இயற்கையின் மணத்தை அள்ளிக்கொட்டுகின்றன." இது சுவாமிகளின் கவிதைக்கு முற்றும் பொருந்தும்.

ஷெல்லியின் கவிதையில், மொழியின்பம் அபூர்வமாக அமைந்திருக்கிறது; அது இயற்கையான மொழியின்பம், செயற்கையில் தோன்றியதல்ல. முப்பதாண்டிற்குள், வாயுவேகம் மனோவேகத்துடன் கற்பனையின் பல வடிவங்களைத் தாங்கும் ஆற்றலுடன் மொழியைச் சிருஷ்டித்திருக்கிறான் ஷெல்லி: உண்மைகள், இயற்கையான தோற்றங்களுடன் இக்கவிஞனின் மதுர சரள நடையில் விறுவிறுப்புடன் குதித்தோடுகின்றன. ஷெல்லியின் கவிக்கனவு, மொழியின்னல் நிறைந்தது;

கவிஞனின் உள்ளத்தில் பிறக்கும் சொற்கள், சொந்த நடையையே தழுவிச் செல்லுகின்றன. ஓர் உயர்ந்த விசாலமான மனோபாவமுள்ள கவிஞன், தனது கற்பனையுலகில் உறங்கி விழிக்கும் போது, சன்னதச் சிறகுகொண்டு கவிதா மண்டலத்தில் மின்னிப்பறக்கிறான். இதை ஷெல்லி அனுபவத்தில் கண்டவன்; இசையின் நுட்பமான வேகம், மொழியின் தசைகளை திருத்தியமைக்கும் காம்பீரியமுள்ளது. ஓர் உத்தமக் கவிஞன் மன ஒருமையுடன் கற்பனையுலகில் யோகம் செய்கிறான்; உலக அறிவெல்லாம், உலக இயற்கையெல்லாம், உலக உணர்ச்சிகளெல்லாம் இக்கவிஞனின் இதயத்திலே ஐக்கியமடைவதும் இயல்பு என்பதை, ஷெல்லி ஆழ்ந்துணர்ந்தவன். மன ஒருமையற்ற செயற்கைக் கவிஞர்கள் சாவது நலம், என்ற கொள்கையைக் கொண்டவன் ஷெல்லி; கீட்ஸ் (Keats) என்ற கவிஞனும் பொய்ப்புலவர்களையும் போலிக் கவிகளையும் நன்றாய்க் கண்டித்திருக்கிறான்.

ஷெல்லி எழுதியிருக்கும் காதல் விளக்கமான "Epipsychidion" என்ற கற்பனை நிறைந்த பகுதியில் காதற் சித்திரம் ஒளிபெற்றுத் திகழ்கிறது. ஒரு பெண்ணின் சௌந்தரியம், கலையின் சிகரமாகவே காட்சியளிக்கிறது. பெண்மையில் உடல், மனம், அழகு, ஜோடிக்கண்கள், புன்முறுவலின் ஓவியம், தந்த அலைக்கைகள், கூந்தலின் புயல், காதலின் ஒளியும், சலன சௌந்தரியமும் கன்னத்

தின் அலைகளும், கழுத்தின் காம்பீரியமும், பெண், மையை அமர நிலைக்கே உயர்த்தி விடுகின்றன; காதல் கன்னிகை, தெய்வக் கன்னிகை; அவள் உள்ளத்தில் உலகமே ஐக்கியமடைந்துவிடுகிறது; அவளுடைய மின்னற் பார்வையில், காதலனின் கவலையே மறைந்துவிடுகிறது; காதற் குறிப்புகள் நிறைந்த அழகியின் ஓவிய உருவில், ஒரு வசந்த வனப்பு காதலின் யௌவனத்தையே உயர்த்திக் காட்டுகிறது; அவள் நிற்கும் காம்பீரியத்தில் அவள் ஒரு காதற்கொடியாக ஆகாசத்தையே அளாவி நிற்கின்றாள்; நமது வாழ்க்கையின் இருளையே போக்கும் ஆற்றலுடையவள். (Emily) எமிலியின் அழகு கலைச் சுரங்கமாகவே பிறந்திருக்கிறது; அவளுடைய விழிகள் கலையின் விழிகள், 'கலக விழிகள்' என்று கூடச் சொல்லிவிடலாம். இயற்கை, அவளுடைய ஆழ்ந்த கண்களில் உண்மைகளை அழியாவண்ணம் கொட்டி வைத்திருக்கிறது. உண்மைக் காதலர்களுக்கு, எவ்வித வேற்றுமையும் உலகத்தில் இல்லை; இருவரும் ஒரே இன்பத்தையே, ஒரே துன்பத்தையே, ஒரே சொர்க்கத்தையே, ஒரே மரணத்தையே தழுவி நிற்கிறார்கள். அவர்களுடைய மனம் என்றும் மாறாது, வெடிக்காது, சலனமடையாது; இதை ஷெல்லி ஆழ்ந்து உணர்ந்திருப்பதுபோல, ஷேக்ஸ்பியரும் தனது கவிதை நிறைந்த 'Sonnets'ல் வற்புறுத்தியிருக்கிறார். இதையே சுப்பிரமணிய பாரதியாரும் கவிதா சன்னதத்துடன் பாடியிருக்கிறார்.

காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்!

இனி நாம் சுவாமி சுத்தானந்த பாரதியாரின் கவிதா ரீதியைக் கவனிப்போம். சுடச் சுடப்பொங்கி வழிந்தோடுகிறது தமிழ் மொழி. சுவாமிஜியும் அருட் பிரவாக நடையில் தனது கவிதையைச் சிருஷ்டித்திருக்கிறார்கள்; அவர்கள் எழுதும் சன்னத நடையில், கலை வெள்ளம், ஞான வெள்ளம், உண்மையின் அகண்ட ஒளி, இன்பநாத இசை, கற்பனையின் தங்கக்கொடி, அன்பின் வெண்ணிறம், கல்வியின் ஒலிச்சித்திரம், சுதந்திரப் பேரிகை, ஈசன் சந்நிதி, எல்லாம் கலந்து தமிழ் மொழியை இதயச் சிகரமாகவே மாற்றி விடுகின்றன. இதயக் கண்ணாடியில், மொழியின் மையல், திருவிளையாடலாக உதயமாகவே காண்கிறோம்; இதயத் துடிப்புகள், அறிவின் அகண்ட ரேகையாகவே, மொழியின் இதயத்தில் ஒளி வீசுகின்றன. இதயம் குதித்துக் குதித்துப் பறந்தால், சொற்களும் இசையலைகளாகவே குந்து போட்டு வருகின்றன.

சுவாமிகளின் ' தமிழ்க்கனல் ' மொழிக்கனல்; ' தலைநிமிர் தமிழா ' என்ற பாட்டை, இதய பூகம்பமாகவே பாடிப் பாடிப் பாருங்கள்.

தலை நிமிர் தமிழா – பெற்ற
தாயின் மனங்குளிர..... ...
மலை குலைந்தாலும் – தமிழா
மனங் குலையாதே!

வீரக்கனல் வளர்ப்போம் — தோள்
விம்மத் திறல் செழிப்போம்
சூரத்துணி வொடுநில் — தமிழா
சொந்த வுரிமையை வெல் !
குன்றினைத் தகர்ப்போம் — எதிர்
கூற்றினையும் குமைப்போம்
வென்றிப் புவி புரப்போம் — கால
வேகத்தினைச் செயிப்போம் !
ஒற்றுமைச் சங்கொலிப்போம் — தமிழா
உண்மைக்குயிர் கொடுப்போம்
வெற்றி முரசடிப்போம் — இங்கே
விண்ணரசைக் கொணர்வோம் !

இந்தப் பாட்டில், சொற்கள், வீறுபெற்ற சுதந்திரச் சொற்கள், வெறிகொண்ட உணர்ச்சியலைகளாகச் சீறிக்கொண்டு வருவதைப் பார்த்தீர்களா ?

சுவாமிஜீ அவர்களின் 'வெற்றிப்பாட்டு' வெற்றியின் உறுதியையே உறுதியாகப் பாடிக் கொண்டு வருகிறது :

'வெற்றி வெற்றி வெற்றியென்று பாடுவோம்
வீறுபெற்ற வீரரென்று கூடுவோம்

*　　*　　*

ஒற்றுமை முரசொலித்து முன் செல்வோம்
உண்மை கொண்டிடர்க் குலத்தை வெல்வோம் !

*　　*　　*

இருளொழிக்கும் இரவி தன்னைக் காணுவோம்
இடரொழிக்கும் இன்பவாழ்வைப் பூணுவோம்
அருள் சுரக்கும் அமரக் கங்கை யாடுவோம்..........
ஆத்ம சக்தியால் எமனைச் சாடுவோம் !'

ஆஹா! என்ன மொழியின்பம், என்ன நடையின் மதுரசரள காம்பீரியம்.—இதுவே தமிழ்மொழியின் வெற்றிக்குரல்!

# 3

## கவிமணியின் கவிதை மின்னல்

ஆங்கில இலக்கிய ஆராய்ச்சியில் ஒரு நிகரற்ற மேதையாக விளங்குபவர் ஏ. ஸி. பிராட்லி* என்பவர். அவர் கவிதையின் இதயப் பண்பை உணர்ந்து ஆராய்பவர்: ஷேக்ஸ்பியரின் கவிதை யுள்ளத்தை மிகமிக ஆழமாக அலசிப் பரிசீலனை செய்திருக்கிறார்; அவருடைய 'ஷேக்ஸ்பியர் சொற்பொழிவுகள்' இலக்கிய ஆராய்ச்சிக்கே முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் அமைந்திருக்கிறது; கவிஞனின் உள்ளம் மலர்ந்து மணம் வீசும் ஷேக்ஸ்பியரின் நாடகக்கலையின் ஆழ்ந்த தத்துவத்தையும், கலையாவேசத்தையும், கவிஞனின் கற்பனைமண்டிய உணர்ச்சி ததும்பிய புதுமொழியையும் எடுத்து விளக்கிக் காட்டும்போது, ரசிகர் பிராட்லி கூறுகிறார், "ஆஹா! ஷேக்ஸ்பியரின் கவிதைக்கலையை எண்ணும்போது, அவரை நான் ஒரு கண்கண்ட தெய்வமாகவே வணங்குகிறேன்."

அதுபோல, நான் 'தேவி' யவர்களின் கவிதை யுள்ளத்தையும், அது மலர்ந்திருக்கும் 'மலரும்

* A. C Bradley

மாலையும்' என்ற நூலையும் நுட்பமாகக் கவனித்துப் பார்க்கும்போது, நானும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களை, ஒரு கண்கண்ட தெய்வமாகவே உணர்ந்து அனுபவிக்கிறேன். இது உண்மை, இதுவே சத்தியம்! வீண்வார்த்தையல்ல.

உண்மையான கவிதையில், உலக உண்மைகள் அழியாவண்ணம் அமைந்து வளர்கின்றன; போலி உணர்ச்சிகள் தோன்றுவதில்லை; காதல் பாடலானாலும் சரி, பக்திப் பாடலானாலும் சரி, அதில் ஓங்கி ஒளிவீசும் ஆன்மிக அஸ்திவாரம் உண்டு: கவிஞனின் புதிய புதிய அனுபவங்கள், புதிய மொழியலைகளில் தவழ்ந்து வருவது இயல்பு; போலிக்கற்பனையோ, உணர்ச்சியற்ற வருணனைகளோ, இதில் காணமுடியாது; இதுதான் உண்மைக் கவிதையென்றும் அருட்பாடல் என்றும், அழியாத தெய்விகத்தன்மை வாய்ந்ததென்றும், அமெரிக்க ஞானியும் கவிஞருமான எமர்ஸன் உறுதியாகச் சொல்லுகிறார்.

நமது கவிமணியவர்களின் பாடல்களில், புதுப் புது அனுபவங்கள், புதுமொழிச் சுனைகளாகவே ஊறங்கி விழிப்பதைக் காணலாம்: சிற்சில சமயங்களில், அவர்களின் எழுதுகோல், சித்திரக்கோலாகவே வளர்கிறது; இன்னும் வேறு சில இடங்களில் சந்த ஜிலு ஜிலுப்புடன், சொற்கள் இசையலையோவியமாகவே பிறக்கின்றன; கவிஞனின் இதயம் சுழலும்போது, அவன் இதயக்குகையினின்று

பறந்துவரும் சொற்களும் ஆனந்தமாய்ச் சுழன்று ரீங்காரமிடுகின்றன. தற்காலப் புதுக்கவிஞர்களில், 'தேவி'யவர்கள் தனிப்பெருங் கவிஞர்; நிகரற்றவர், அருட்கவி, இயற்கையாகவே காதலித்துப் பாடும் பேரியல்பு வாய்ந்தவர்.

உதாரணமாக, சில பாடல்களை பாடிப்பார்த்து இன்புறுவோம். 'அன்பின் வெற்றி' என்ற தலைப்பின்கீழ் மீராவின் பாட்டைப் பாருங்கள். போஜராஜன் மீராவை நாட்டைவிட்டு வெளியே அனுப்பிவிட, அவள் காட்டின்வழியே பாடிக்கொண்டு செல்லுகிருள்.

" எத்திசையும் மேகங்கள் எழுந்து மின்னி
 இடி முழங்கிப் பெருமழையும் பெய்யக் கண்டோம்
தத்திவரும் குளிர்வாடை வீசக் கண்டோம்
 தவளையொடு சாதகமும் கத்தக்கண்டோம்
சித்த மகிழ் பூங்குயிலும் கூவக் கண்டோம்
 ஸ்ரீநந்த குமரன்வர வின்னுங் காணும்
பத்தியொடு பணிகின்றேன் கிரித ராவுன்
 பாதமலால் வேறுதுணை யறியே னையா "

இந்தப்பாடல், பக்தியில் மலர்ந்த இசைச் சித்திரமல்லவா? 'மூன்று விஷயங்கள்' என்ற பாட்டை அனுபவித்துப் பாடுங்கள்:

" கூவிப் பறக்குமொரு – கிளியினைக்
 கூட்டில் அடைத்து வைத்தால்
தேவர் உலகமெல்லாம் – அதுசினத்
 தீயை எழுப்பிடுமே.

*  *  *

மன்னிய சோலையிலே – ஒரு குயில்
வாடி வருந்து மெனில்
கின்னரர் கிம்புருடர் – தளர்ந்து தம்
கீத மிழப்பாரை யோ.

*　　　*　　　*

சிட்டுக் குருவிக்கேனும் – ஒரு சிறு
தீங்கினைச் செய்பவரை
நட்டநல் நண்பராக – உலகமும்
நம்பிக்கை கொள்வதுண்டோ ?''

இந்த மூன்று விஷயங்களும், ஆங்கிலக் கவிஞனும் ஞானியுமான வில்லியம் பிளேக் (William Blake)* பாடிய பாடல்களைத் தழுவியவை என்று கூறிவிடலாம். ஆனல் மொழியின் சிருஷ்டிச் சிறப்பால், நமது கவிமணி, பிளேக் என்ற ஆங்கிலக் கவிஞரை மிஞ்சி விட்டார்.

'ஊன்றி உணர்தற்குரிய உண்மைகள்' என்ற தலைப்பில், 'தேவி'யின் 6-வது பாடலைப் பாருங்கள் :

"கால நதியின் கதியதனில்
கடவு ளாணை காண்பீரேல்
ஞால மீது சுகமெல்லா
நாளு மடைந்து வாழ்வீரே"

---

* "A robin redbreast in a cage
Puts all Heaven in a rage
A dog starved at his master's gate
predicts the ruin of the State"

— WILLIAM BLAKE

இதைப்போல, வில்லியம் பிளேக்கின் கருத்தையும் பாட்டில் பாருங்கள்.

"See a world in a grain of sand,
And a heaven in a wild flower,
Hold infinity in the palm of your hand
And eternity in an hour"

சிறு மணல் பொடியில் உலகத்தையும், காட்டு மலரில் இறையின் விண்ணையும், உனது உள்ளங் கையில் அகண்ட சக்தியையும், ஒரே மணியில் அகண்ட கால கதியையும் அறிந்து கொள்ளும்படி, ஞானி பிளேக் பேருண்மைகளை எளிய சொற்களில் பாடி வலியுறுத்துகிறார்.

'பாரசீகக் கவியமுதம்' என்ற மகுடத்தில் வரும் பாடல்கள் 'உமர்கய்யாம்' பாடிய பாடல்களைத் தழுவியே, உண்மையைத் துருவியே, வெளி வருகின்றன. இந்தத் தமிழாக்கம் தமிழ் வளர்ச்சிக்கு 'தேவி' அவர்கள் செய்த ஒரு சிறந்த தொண்டாகும். 61 பாடல்களும் தொடர்ந்த கவிதா மின்னல்களாகவே விளையாடுகின்றன. 'விதி'யின் தலைவிதி, மிக ஆழமாக வாழ்க்கையின் வருணங்களில் சித்திரிக்கப் பட்டிருக்கிறது. விதிச்சுழலில், நமது ஊனுடல் ஓர் உதிரும் சருகு.

"எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதி எழுதி மேற்செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்

வழுவிப் பின்னுய் நீங்கியொரு
வார்த்தை யொன்றை மாற்றிடுமோ
அழுத கண்ணீ ராறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ ?

எவ்வளவு அருமையாக இந்தப் பாடல் அமைந் திருக்கிறது! இதுவே விதியின் சித்திரம், விதியின் விசித்திரமும் கூட.

லாரன்ஸ் பினியன், ராபர்ட்பிரிட்ஜஸ் கூறுவது போல 'தேவி' அவர்கள் பாடியிருக்கும் பாடல் களில், இயற்கையும் மனித இயற்கையும் களங்க மற்று, பிறந்த மேனியாகவே சுதந்திர உணர்ச்சி யுடன் இன்பமாய் விளையாடுகின்றன. கவிஞரின் இதயத்திலிருந்து உதயமாகும் சித்திரங்கள், இயற் கைக்கு முரணுகத் தோன்றவில்லை. காதலோ, பக்தியோ சக்தியோ, இறையோ மறையோ, கிளியோ குயிலோ, புலியோ மயிலோ-எதைப்பற்றி நமது கவிஞர் பாடினுலும்—உள்ளே துள்ளிக் குதிப்பது கவிஞரின் மாசற்ற உள்ளம். கவிதைக் கட்டுக் கோப்பும், கலையுணர்ச்சியுடன் அழியாச் சித்திரமாகவே அமைந்திருக்கிறது. ஆழ்ந்த உண் மைகள், உறுதியான மொழியில் சௌந்தரிய உணர்ச்சியுடன் வளருகின்றன. தமிழ்க் கவி தைக்கு நவீன முறையில் உயிரும் ஆக்கமும் அளித் திருக்கும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர் களைத் தமிழுலகம் மறப்பதரிது.

## 4
## தேவி * தாகூர் * ஷெல்லி

இம் மூன்று கவிமணிகளும் உயர்ந்த மன நிலையிலிருந்து பாடுகிறார்கள். இயற்கையிலோ, மனித இயற்கையிலோ அபூர்வமான காட்சிகளைக் கண்டதும், கவியின் உள்ளம் துடித்துக் குமுறிக் கொந்தளித்துக் கவிதையே பொழிகிறது. இந்த மனநிலை இம் மூன்று கவிகளுக்கும் முற்றும் பொருந்தும்.

தேவி தென்னிந்தியக்கவி; தாகூர் வட இந்தியக் கவி; ஷெல்லி ஆங்கிலக் கவி. தேவி தமிழில் இன்ப உச்சியில் பாடுகிறார்; தாகூர் வங்க மொழியில் இசைவெறியில் பாடுகிறார்; ஷெல்லி ஆங்கி பாஷையில் தனது இதய நிறைவைப் பாடிக் கொட்டுகிறார்.

இவர்கள் உண்மைக் கவிகள்; உணர்ந்து பாடுபவர்கள்; போலிக் கவிகளைப்போல, சொற்களைத் தேடி அடுக்கி அலங்காரம் செய்து யாப்பிலக்கணச் செக்கில் சாறு பிழிபவர்கள் அல்ல. நேரே உண்மையைத் தரிசித்து, உள்ளம் பூரித்துப் பாடுவார்கள்.

உண்மைக் கவிதையில், உணர்ச்சியும் கற்பனையும் மொழியின் கூர்மையும் மிக மிக அவசியம். உணர்ச்சி உயரும்போது, கற்பனையுலகம் விசாலித்து மொழியின் கூர்மையை உடனே படைக்கிறது. இனிய எளிய சொற்கள், கவியின் உள்ளத்திலின்று பறந்து வெளியே வருகின்றன; அநேக

மாய், சொற்கள், கவியின் விந்தைச் சொற்கள் உள்ளத்திலேயே பிறக்கின்றன; பிறந்து ஊதிக் கொண்டு வெளியே வருகின்றன. கவிஞனின் மொழியில், உலகமே அலைகிறது, உலகமே சுழல்கிறது, உலகமே சித்திரமாகஉறங்கி விழிக்கிறது. மேகத்தில் விளையாடும் மின்னலைக்கண்ட ஒரு கவிஞன், மண்ணுலகத்திற்கு அந்த மின்னலை தன் மொழியில் கொண்டுவந்து விடுகிறான். இதுவே மின்னற் கவிதை!

தாகூர் 'கீதாஞ்சலியை' தனது தாய் மொழியானவங்க மொழியில் மிக நயமான இசை நுட்பத்துடன் பாடியிருக்கிறார். அதே கருத்தைத் தாகூர் ஆங்கிலத்திலும் மிக நுட்பமாகவே மொழி பெயர்த்திருக்கிறார். ஆனால் மூலத்தின் இசை மின்னல் ஆங்கில மொழிபெயர்ப்பில் இல்லை. இந்த ஆங்கில மொழிபெயர்ப்பிலேயே ஐரோப்பா பல அதிசயங்களையும் அற்புதங்களையும் கண்டு, கருத்தின் அழகில் மயங்கி, தாகூரும் 'நோபல் வெகுமதி' (Nobel Prize) பெறும்படியான பாக்கியம் ஏற்பட்டது. இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு, வசன காவியநடையில் அமைந்திருக்கிறது. இதைப் படித்து அதன் இன்பத்தை அறிந்த கவி மணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள்' அதே கருத்தைத் தழுவி இன்பமான கவிகளாக 'அஞ்சலி' என்ற தலைப்பிட்டு 12 பாடல்கள் பாடியிருக்கிறார்கள். உயர்ந்த கருத்துக்கள், இன்பமொழியில் பாய்ந்து சுழன்று வருகின்றன.

பாட்டு 1.

என்றுமெனை யழிவிலாப் பொருளா யியற்றினை
ஈதுனது திருவுள்ளமே
ஈடற்ற கலமிது கவிழ்த்திக் கவிழ்த்தியுயிர்
ஏனே திருத்திவைப்பாய்
குன்றினெடு குழியெலா மிச்சிறிய வேயின்வரு
குழல்கொண்டு சென்று நீயுன்
குமுதவாய் வைத்துநவ நவமான இசைகள்செவி
குளிரவே ஊதிநிற்பாய்
பொன்றுத லிலாதநிலை தரவல்ல வுன்கரப்
புனிதமுடல் தீண்டலாலே
பூரித்த வுள்ளமகி ழெல்லையற மாய்ந்ததும்
போற்ற மொழியற்று நின்றேன்
நன்றுதவு கொடைகோடி யிக்குழவி கைகளில்
நாளும் நீ அள்ளியிடினும்
நான் குறைகள் சொல்லியருள் வேண்டா
திருந்திடேன்
ஞான ஒளி வீசுமதியே

பாட்டு 6.

என்னுளத்து ஞானவொளி ஏற்றியமெய்த் தீபம்
இறையாகும் நீயதனால் இறையேனும் பொய்கள்
மன்னுபல நினைப்புகளில் வந்து கலவாமல்
வன்மையொடு காத்திடுவன் வழுத்தரிய சிவமே

பக்திப் பரவசத்துடன் தாகூர் பாடியதை, நமது கவிமணி அவர்கள் எவ்வளவு நுட்பமாக அறிந்து தமிழில் பாடியிருக்கிறார்கள், பார்த்தீர்களா?

இனி தேவியும் ஷெல்லியும் எவ்வாறு பாடுகிறார்கள் என்பதை பார்ப்போம். கற்பனையுலகில், இரண்டு கவிகளும் எப்படி உலாவுகிறார்கள்? தேவியின் கற்பனைக்கிளியும், ஷெல்லியின் கற்பனை வானம்பாடியும் எந்த அளவு உலகத்தை ஒட்டிப் பறந்து பாடுகின்றன என்பதை கவனியுங்கள். ஷெல்லியின் கவிதையில், உலகம் திரவமாகவே இசைச்சிறகுடன் உதயமாகிறது; பிள்ளையவர்களின் கிளி, உறுதியான உயிர்ச்சித்திர மாகவும், வருணக்களஞ்சிய மாகவும், பேசும் மரகதமாகவுமே பிறந்து, பறந்து சிறந்து வளருகிறது! இரண்டு கவிகளின்சொற்களும் - மிக எளிய சொற்கள் நயமான கருத்துக்களிற் பாய்கின்றன :

### * கிளி

வட்டமா யுன்கழுத்தில்—ஒரு நாளும்
வாடாத ஆரமதை
இட்டவர் ஆரடியே—எனக்கும்
இயம்புவையோ கிளியே

*

மாணிக்க மூக்கழகும்—மரகத
வர்ண வடிவழகும்
காணக்கண் ணயிரந்தான்—இருப்பினும்
கண்டு முடிந்திடுமோ ?

*

சாய்ந்து தலைவணங்கி—இனிய
தமிழை நீ கற்குமுறை

ஆய்ந்த புலவருமே—எழுதி
அயர்ந்துகை சோர்வரம்மா

*

கொம்பிற் கொலுவிருந்து—களித்துநீ
கூவுங்குரல் வருமேல்
பம்பி யெழுஞ்சோலை—எனக்குப்
பரம பதமடியோ

தேவியின் 'கிளி' எவ்வளவு நயமான உயிர் நிறைந்த கவிதைச் சித்திரமாக அமைந்திருக்கிறது, பார்த்தீர்களா? இதில் காவியமே, ஓவியக் கலையின் உள்ளத்தையே எட்டிப் பிடித்து விட்டது.

இந்தப் படத்தை ஒரு கையில் வைத்துக் கொண்டு, மற்றொரு கையில் ஷெல்லியின் 'வானம் பாடி'ச்சித்திரத்தைப் பாருங்கள். வானம் நிறையப் பாடிப் பறக்கும் வானம்பாடி—மிகச்சிறிய உடல், நெருப்புப் புகைபோல உலாவுகிறது; உடற் சுமை யின்றி உயர உயரப் பறந்து பறந்து, பாடிப் பாடிக் குதித்துக் குதூகலித்து வான் கடலில் துடிக்கத் துடிக்கப் பாடுகிறது! மறையும் சூரியனின் தங்க மின்னலிலே மிதக்கிறது; அதன் இசையின்பம் உடற்சுமையற்றது; அதன் உடல் மேகத்தில் மறைந்தாலும், இசை மழை பொழிந்து கொண்டேயிருக்கிறது; வான ஒளித்துளியாகவும் நட்சத்திரம் போலும் மின்னுகிறது; சந்திர ஒளிக்கிரணங்கள்

போல வானம்பாடியின் இசைக்கிரணங்கள் விண்ணையும் மண்ணையும் மூழ்கடிக்கின்றன ; சிந்தனையின் மின்னொளியில் மறைந்திருக்கும் கவிஞனைப் போல், வானம்பாடியும் மறைந்து இசை மழை பொழிகிறது ; இசையால் தன் காதலைச் சாந்தப் படுத்திக் கொள்ளும் காதலியைப்போல், உயரத்தில் இசையில் வானம்பாடி சாந்தியடைகிறது ; கவலையற்ற பறவை இசைப்பித்திலே மூழ்கிவிட்டது ; கவலையுள்ள மனிதன், சோகம் நிறைந்த கீதமே பாடுகிறான். இதுதான் ஷெல்லியின் இசைப் பறவை - வானம்பாடி.

தேவியின் வெண்ணிலாவும் ஷெல்லியின் சந்திரனும், ஒன்றை யொன்று ஆழமாய்ப் பிரதிபலிக்கின்றன. மேகமண்டலத்தில் நட்சத்திரத்தோழிகளின் மத்தியில், சாந்த சௌந்தரிய காம்பீரியத்துடன், சந்திரன் கொலுவீற்றிருக்கும் அழகை ஷெல்லி நன்கு உணர்ந்தே பாடியிருக்கிறான் ; சந்திரனின் ஜோதி, பாலபிஷேகமாகவே எங்கும் வழிந்தோடுகிறது ; விண்ணிலிருந்து கீழே இறங்கி ஏரியிலும், ஆற்றிலும், ஓடையிலும் சந்திரன் தனது வடிவத்தைப் பிரதி பலித்துக் கொண்டிருக்கிறது ; நட்சத்திரங்கள் பொன்வண்டுகளாகவே மாறிவிடுகின்றன. நிலவு விண்ணில் கொப்புளித்துக் கொண்டு கனவின் ஆழ்ந்த சாந்தியாகக் காட்சியளிக்கிறது.

தேவியின் வெண்ணிலா, கற்பனையுலகில் மூழ்கி மூழ்கி வெளிவருகிறது. அதனுடைய ஜோதி

வளர்ச்சி தெரிகிறது. சின்னஞ்சிறுவில், அதன் பின் செம்பொற்குடம், வளர்ந்து பெருகும் நிலை, வட்டம் திருந்துதல், தளர்ந்து தளர்ந்து குறைந்து வருதல், இப்படியான விந்தைத் தோற்றங்கள்; இரவைப் பகலாய் இயற்றும் சந்திரன், எத்தகைய கற்பனைக் காட்சியைத் தருகிறது, பாருங்கள்.

பொன்மரம் காய்த்த கனியிதுவோ இந்தப்
  பூமகள் ஆடும் கழங்கிதுவோ
கன்மன முங்களி கொள்ளக்—கவிஞெளி
  காட்டி விளங்கும் மதியிதுவோ

கம்பன் கவிதையில் கைவிளக்காக அமையும் சந்திரன், தேவியின் மொழியில் மண்ணகஞ் செய்திடும் புண்ணியமாகவே மலர்ந்து விடுகிறது.

* * *

ஏழு கவிஞர்களும் கவிதை யாழின் ஏழு தந்திகள்: இசைக் கடலையே முற்றுகையிடும் அனந்த கோடி இன்பத்தை வாரி இறைக்கும் மின்னல் தந்திகள்.

ஆம்!.................................ஆம்!

நோபல் பரிசு பெற்ற

● கீதாஞ்சலி — தாகூர் ரூ. 2 8 0

கனி கொய்தல் — „ ரூ. 2 8 0

விரைவில் வெளிவரும்

"சாதனா" — தாகூர் ரூ. 3 8 0

(தமிழில் ரா. நடராஜன்)

"வளர்மதி" — தாகூர் ரூ. 2 0 0

(தமிழில் யஸ். லலிதா B. A.)



* கவிஞன் சொற்கள் !

சிறகு முளைத்த சொற்கள்,

மரகத மணிகள்,

பரிமளிக்கும் ரோஜா இதழ்கள்,

மல்லிகைச் செண்டுகள்,

நாதமிடும் கடல் அலைகள்,

சேயின் செங்கரும்பு மழலைகள்,

மான்விழி மின்னல்கள்,

புதுமைப் பெண்ணின் புன்முறுவல் கேணி,

வயிர ஸ்டார் சன்னங்கள்,

தேமல் படர்ந்த பாற்குடங்கள்,

தேன் வலை,

கனிரஸக் கிண்ணம்,

ஆம்; இன்னும் எவ்வளவோ சொல்லலாம்,

ஆனல், வேண்டாம் !

**STAR PUBLICATIONS**
Ramachandrapuram
(Trichy Dt.)